Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :32 மார்கழி 12 ஆம் நாள் சனிக்கிழமை 28 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## ஹெரோயினுடன் 3பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஹெரோயினை வைத்திருந்த மூவரைக் கைது செய்துள்ளதாக, யாழ். மாவட்ட சிறப்புக் குற்றத் தடுப்பு பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்களிடமிருந்து 70 மில்லி கிராம், 80 மில்லி 08



## கண்ணாமூச்சி ஆடிய ராஜித கைது

### 30ஆம் திகதி வரை மறியல்

கொழும்பு, டிசெம்பர் 28

3 நாள்களாக தேடுதல், நடுநிசியிலும் மருத்துவமனையில் முகாமிட்டு காத்திருப்பு, பிணையில் விடுதலையாகிச் செல்வதை தடுத்தல் என்று வியூகம் வகுத்தே ராஜிதவைக் கைது செய்வதற்கான வேட்டையைக் குற்ற விசாரணை பிரிவினர் முன்னெடுத்தனர். சி.ஐ.டியின் கைதுப் பொறிக்குள் சிக்கிய ராஜித, நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம், சிறைச்சாலைப் பொலிஸாரின் முழுமையான பாதுகாப்பின்கீழ் சிகிச்சை பெற்றுவருகிறார். 23

## மீண்டு வருவேன்

### கைதாக முன் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.28

நான் எவ்வித குற்றங்களையும் செய்யவில்லை. அரசியல் பழிவாங்கலுக்கமையவே கைது செய்யப்படவுள்ளேன். என்னைச் சிறைச்சாலையில் அடைத்தாலும் நான் மீண்டு வருவது 08

## வெள்ளைவான் சாரதிகளுக்கு

### மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 28

வெள்ளை வாகனத்தில் கடத்தி முதலைக்கு இரையாக்கியதாக செய்தியாளர் சந்திப்பில் தகவல் வெளியிட்ட இருவரையும் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜெயர்த்ன முன் நேற்று விசார 08

## உள்ளதையும் கெடுக்க வேண்டாம்

### கூட்டமைப்புக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு, இருப்பதையும் குழப்பியடித்ததாக அமைந்துவிடக் கூடாது. ஒட்டுமொத்த சிறு 08

## அடுத்தது யார்?

### சஜித் கேள்வி

கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அரசியல் பழிவாங்கல் தொடர்கின்றது. இந்த நிகழ்ச்சி நிரலில் அடுத்த இலக்காக இருப்பவர் யார் என்று நாம் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகின்றோம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா 08

## நிதியை விடுவியுங்கள்

### மஹிந்தவிடம் கோர கூட்டமைப்பு முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 28

கடந்த அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களுக்குரிய நிதிகளை விடுவிக்குமாறு. 08

## ஏ.எல். பெறுபேறு வெளியானது

### உயிரியல் பிரிவில் தேசியமட்டத்தில் யாழ். இந்து மாணவன் 2 ஆம் இடம்

ஹாட்லி 10பேர் 3ஏ, யாழ்.இந்து 7பேர் 3ஏ



தேசிய மட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஜெயானந்தராசா கிருஷிகன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். 23

யாழ்ப்பாணம், டிசெ. 28

2019ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்னிரவு வெளியாகின. உயிரியல் பிரிவில்

### ரஞ்சன் ராமநாயக்க ஏ.எல். பரீட்சையில் 2 பாடத்தில் சித்தி

கொழும்பு, டிசெ. 28

வெளியாகியுள்ள 2019ஆம் ஆண்டு கல்வி 23

## 77 பேரின் பெறுபேறு நிறுத்தி வைப்பு

கொழும்பு, டிசெ. 28

2019ஆம் ஆண்டு கல்வி பொதுத் 07

### முச்சந்தி முரளி



வெள்ளைக் கொடி என்றா அவைக்கு அலர்ஜி...

## கூட்டமைப்பு வெள்ளைக்கொடி அரசோ போர்க்கொடி

யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படமாட்டாது என்று கூறுவது நல்லிணக்கத்துக்கு மாறான சிறிய அங்கமே. அரசின் போக்கு முற்று முழுதாக மாறியிருக்கின்றது. 06

## 47 பவுண் கொள்ளை

### தம்பதியரைத் தாக்கி அட்டகாசம்

சாவகச்சேரி, டிசெ. 28

தம்பதியரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிய கொள்ளையர்கள், 47 பவுண் நகைகளையும் பெறுமதி மிக்க பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுணாவில் குளம் முருகமூர்த்தி கோயிலுக்கு அருகில் நேற்று அதிகாலை 1 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய 07

## மன்னாரில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

### காரணம் இதுவரை வெளியாகவில்லை

மன்னார், டிசெ. 28

மன்னாரில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார். அவரது சடலத்துக்கு அருகில் கத்தி ஒன்று 23

## நாட்டை பிளவுபடுத்த முனைவோர் மாணவரை இலக்கு வைக்கின்றனர்

### வவுனியாவில் மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 28

நாட்டை பிளவுபடுத்துவதற்கான சதித்திட்டங்களை தீட்டி செயற்படுத்தி வரும் ஒரு சில நபர்களும், தரப்புகளும் மாணவர்களின் மனதை 07

## கசிப்புக் காச்சியோர் காட்டுப்புலத்தில் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 28

காட்டுப்புலம் காட்டுப்பகுதியில் கசிப்புடன் இருவர் கைது செய்யப் 07

# தொழிற்படையை உருவாக்குங்கள்

## ஜனாதிபதி அறிவுரை

கொழும்பு, டிசெ. 28
தொழிற்பயிற்சித் துறையில் புத்தெழுச்சியை ஏற்படுத்தி, உயர் திறன் கொண்ட தொழிற்படையை உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற்சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் பொறுப்பை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

திறன்விருத்தி தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் நிறுவனத் தலைவர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற்சந்தைகள் குறித்து ஆராய்ந்து, அவற்றிற்கேற்ற வகையில் பாடநெறிகளை உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டும். வறிய மக்களை வலுவூட்டும் சுயதொழில் சார்ந்த பயிற்சி சந்தர்ப்பங்களை விரிவுபடுத்த வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

திறன்விருத்தி அமைச்சின் கீழ் பெரும் எண்ணிக்கையான பயிற்சி நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த அனைத்து நிறுவனங்களையும் ஒருமுகப்படுத்தி முறையான மற்றும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைக்க வேண்டியது அவசியமாகும்.

தொழிற்பயிற்சித்துறை பற்றி இளைஞர் தலைமுறையிடம் உளப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். பாடநெறிகளை அறிமுகப்படுத்தும்போதும் பாடநெறிகளுக்கு பெயரிடும்போதும் தொழில் மதிப்பும் கவர்ச்சியுமிக்க வகையில் திட்டமிட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி அவர்கள் விளக்கினார்.

நாட்டின் முக்கிய துறையாக விவசாயத்துறை உள்ளது. அதற்கேற்ற வகையில் போதுமான அளவு கற்கை நெறிகள் இல்லாதிருப்பது பற்றி கவனம் செலுத்திய ஜனாதிபதி அவர்கள், மருத்துவ, பொறியியல் துறைகளைப்போன்று விவசாயத்துறையிலும் நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் நாட்டுக்கு அதிகம் தேவையாக உள்ளது. எனவே புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தும்போது அதன் குறைபாடுகளை தீர்க்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். (ஓ.5)

# பிடியாணை பிறப்பிப்பதா கைது செய்கிறீர்களா?

## பொலிஸாரிடம் நீதிவான் கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 28

மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்களை கைது செய்து நீதிமன்றில் நிறுத்துங்கள். முடியாவிட்டால் அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் தயாராக உள்ளதென ஊர்காவற்றுறை நீதிவான் கூறியதாக, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மண்கும்பானில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொதுமக்கள் சார்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் முன்னிலையானார்.

வழக்கு முடிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், மண்கும்பானில் மணல் கொள்ளை இடம்பெற்றுவந்த நிலையில் பொதுமக்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் இணைந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். ஒரு சிலர் மட்டுமே கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில், அண்ணளவாக 10 பேர் வரையில் கைது செய்யப்படாமல் உள்ளனர். அவர்களைக் கைது செய்ய முடியவில்லை என்று பொலிஸார் மன்றில் கூறியிருக்கின்றனர்.

ஆனால் அந்த நபர்கள் ஊருக்குள் வந்து செல்வதாகவும், பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர். அதனை முறைப்பாட்டாளர் பிரசன்னத்தில் நீதிமன்றில் வாய்மூல முறைப்பாடாக கூறியுள்ளோம். அதனை கருத்தில் எடுத்துள்ள நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருப்பதுடன், கைது செய்ய முடியாவிட்டால் பகிரங்க பிடியாணை பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

எனவே இத்தோடு மணல் அகழ்வு நிறுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். மறுபக்கம் கனியவள திணைக்களம் மணல் அகழ்வதற்கான சகல அனுமதிகளையும் நிறுத்தியுள்ளது. மணலை அகழவும் முடியாது, கொண்டு செல்லவும் முடியாது. மணல் மிக முக்கியமான இயற்கை வளம். அதனை பாதுகாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இந்த விடயத்தில் பொது நன்மைக்காக மக்கள் முன்வந்துள்ளார்கள் என்று கூறியுள்ளார். (ஓ.5,ரி)

# ஜனாதிபதியின் பெயரை பாவித்தவர் மாட்டினார்

கொழும்பு, டிசெ. 28
ஜனாதிபதியின் ஆலோசகர் என்று கூறி பாடசாலை அதிபரை அச்சுறுத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் என்று கூறிக்கொண்டு மொரட்டுவையில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் அதிபரை அச்சுறுத்திய நபர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீயானந்த திஸ்ஸ டி அல்விஸ் என்ற அந்த நபர் மொரட்டுவை சேர்ந்தவராவார். இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற இந்த நபரை மொரட்டுவ நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ.5)



# மணல் மாபியாக்களை வளர்க்கின்றதா அரசு?

## கிளர்ந்தெழுந்தது மன்னார்

மன்னார், டிசெ. 28
மன்னாரில் சட்ட விரோத மணல் அகழ்வுக்கு எதிராக நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

பொறுப்பற்ற பிரதேச செயலகங்கள் எதற்கு, சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸ் வேடிக்கை பார்க்கின்றதா?, சட்ட விரோதிகளுக்கு உடந்தையாக வுள்ள புவிச்சரிதவியல் திணைக்களம் எதற்கு, வனத்தை வனாந்தரமாக்கும் வனவளத்திணைக்களம் எதற்கு?, மன்னாரை பாலைவனமாக்க போகின்றீர்களா?, மணல் மாபியாக்களை வளர்ப்பதா அரசின் நோக்கம்? உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தோட்டவெளியில் மண் அகழ்வில் ஈடுபட்டமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கு கொண்ட அருட்தந்தை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் குணபாலனிடம் மனுக் கையளிக்கப்பட்டது. போராட்டத்தில் அருட்தந்தையர்கள், மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்று பலர் கலந்து கொண்டனர். (ஓ.5,56,60)

# மணல் அகழ்வுக்கு எதிராகப் போர்க்கொடி

## சாவகச்சேரியில் திரண்டனர் மக்கள்

சாவகச்சேரி, டிசெ. 28
சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கான மாபெரும் மக்கள் எழுச்சி நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.



மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஸ், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகர சபை உபதவிசாளர் அ.பாலமயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அணி செயலர் திருமதி விமலேஸ்வரி சிறீகாந்தரூபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கக் கோரி சாவகச்சேரி பிரதேச செயலரிடம் மனுக் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் மண் அகழ்வை தடை செய்யும் போராட்டம் ஆரம்பமானது. (ஓ.5,159)





## பரிசளிப்பும் கௌரவிப்பும்

கொடிகாமம்.டிசெ.28
சாவகச்சேரி நகராட்சி மன்ற பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பும் தேசிய மட்ட சாதனையாளர் கௌரவிப்பும் நகராட்சி மன்றத்தின் பொன்விழா மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றன.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்ற ஓய்வு பெற்ற நிர்வாக அலுவலகர் திருமதி கௌரீஸ்வரி விக்னகுமார், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் சி.முரளிதரன், சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் சி.சிவரூபன், நகரசபைச் செயலாளர், உபதவிசாளர் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ஜ-159 ,9)

## 42 ஏக்கர் நிலத்தில் கஞ்சாத் தோட்டம்!

யால வனப்பகுதியில் சுமார் 42 ஏக்கரில் பயிரிடப்பட்ட கஞ்சா செடிகள் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டுள்ளன என்று சிறுப்பு அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.
கஞ்சா பயிரிடப்பட்டமை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சுமார் 8 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட கஞ்சா செடிகள் காணப்பட்டன என்றும், அவற்றைப் பயிரிட்டவர்கள் யார் என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)



# வடமராட்சி கிழக்கில் தண்ணீருக்கு சிரமம்

வடமராட்சி,டிசெ.28
**வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் சில கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரைத் தொடர்ந்து வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் சில கிராமங்களில் மக்களின் குடிதண்ணீர் கிணறுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
கிணறுகளின் நீர் ஒருவிதமான மணமும், தண்ணீரின் நிறமும் மாறியுள்ளது. இதனால் மருதங்கேணிப் பிரதேச செயலகத்தினரால் தண்ணீர் தாங்கிகள் வைத்து குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.
மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய இடங்களுக்கு குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த நடவடிக்கை ஒரு வாரம் மட்டுமே இடம்பெற்றது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். வசதியுள்ளவர்கள் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தி வருகின்றனர். வசதி இல்லாதவர்கள் கிணற்று நீரைப் பயன்படுத்தி வருகின்றனர்.
இரண்டு தண்ணீர் தாங்கிகள் சொந்தமாக உள்ள போதும், இடர் ஏற்பட்டு குடிதண்ணீர் இல்லாமல் திண்டாடும் மக்களுக்கு ஏன் தொடர்ச்சியாக நல்ல குடிதண்ணீர் மருதங்கேணி பிரதேச செயலகத்தினரால் வழங்க முடியாது என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-70)

# ஆழப்படுத்தப்படும் முல்லை. நந்திக்கடல்

முல்லைத்தீவு.டிசெ.28
நந்திக்கடல் ஆழமாக்கப்பட்டு கடற் பகுதியை நம்பி வாழும் மக்களின் பொருளாதாரம் மேம்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். முல்லைத் தீவில் கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளை அமைச்சர் நேற்றுச் சந்திதார்.



சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்தி சிலர் தொழிலை மேற்கொள்வதால் இதர மீனவர்களது தொழில் பெரிய அளவில் திட்டமிட்டு பறிக்கப்படுகிறது. பிற பகுதி கடற்றொழிலாளர்கள் அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, இயற்கையின் பாதிப்பு எனப் பலவகைகளிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே இவ்வாறான பிரச்சினைகளுக்கு தகுந்த தீர்வையும், பாதுகாப்பையும் பெற்றுத் தருமாறு மீனவர்கள் சந்திப்பின் போது கோரிக்கை விடுத்தனர்.

(க-ரி3)

## இரு போட்டி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.28
நாடு தழுவிய ரீதியில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இரு போட்டிப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.
மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்ற கூடியதான பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக இந்தப் போட்டிப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.
இதில் நுண்ணறிவு, தொழில்நுட்ப அறிவை பரீட்சிக்கக் கூடிய இரு எழுத்துப் பரீட்சைகள் இன்று இடம்பெறவுள்ளன. இதேபோல நாளை ஞாயிற்றுக்கிழமைவே ரயில்வே காவலர் (ஆண்)பதவிக்கான போட்டிப் பரீட்சையும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-50)

## சிரமதானம்

சாவகச்சேரி,டிசெ.28
பாடசாலையின் 2020 க்கான கல்வியாண்டு எதிர்வரும் இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், முன்னேற்பாடாகபாடசாலைகளில் சிரமதானம் நடத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை சிரமதானம் இடம்பெறும்.
கல்லூரி மாணவர்களின் பெற்றோர் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு கல்லூரிக்கு வருகை தருமாறு அதிபர் செ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (க-9)



## தாமரைக்குளம் வீதியின் அவலம்

மன்னார்,டிசெ.28
மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அடம்பன் தாமரைக்குளம் வீதியைச் சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். செம்மண் வீதியானது கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த மழையால் பெரும் பள்ளங்கள் ஏற்பட்டு இன்றும் வெள்ளம் தேங்கி சகதியாகக் காணப்படுகிறது.
இந்த வீதியால் தினமும் பல நூற்றுக் கணக்கானோர் பயணிக்கின்றனர். அவசரத்துக்கு உந்துருளியோ சிறிய ரக வாகனங்களோ செல்ல முடியாமல் பல இடங்களில் குண்டும் குழியும் ஏற்பட்டுள்ளன. வீதியை விரைவில் சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சந்தியோகுவிடம் கேட்ட போது, இந்த வீதி மாகாண சபையின் அபிவிருத்திக்குள் தார்வீதியாக உள்வாங்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல வீதிகளைச் சீரமைத்துக் கொடுத்துள்ளோம். வீதி தொடர்பாக கிராம சேவையாளர் தரவுகளை எமக்குத் தரும் பட்சத்தில் தற்காலிகமாக கற்கள், மண் போட்டு வீதியைச் சீரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்றார். (க-213)





வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்துக்கு தமிழ் விருட்சம் அமைப்பினால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. புலம் பெயர்ந்து லண்டனில் வசித்து வரும் தாயக உறவுகளான திருமதி சுகந்தி பாலரஞ்சனின் நிதி உதவியை தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் உரியவர்களிடம் நேற்றுக் கையளித்தார். (க)

## அமர்வு பிற்போடல்

அச்சுவேலி டிசெ. 28
கோப்பாய் மத்தியஸ்தர் சபையின் அமர்வுநாளைநடைபெறமாட்டாது. இந்த வருட அறிக்கைகள் பூர்த்தி செய்ய இருப்பதால் நாளைய அமர்வுகள் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும்வழமை போல அமர்வுகள் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனகோப்பாய்பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.கிருஸ்ணப்பிள்ளை அறிவித்துள்ளார். (104,11)

## யானை மற்றும் குதிரைகள் சூழ ஐயப்ப சுவாமி வீதிவலம் வந்தார்



யாழ்ப்பாணம், டிசெ. 28
யாழ்ப்பாணம் கோண்டாவிலிலுள்ள ஐயப்ப சுவாமி, இருமுடி தரித்த ஐயப்ப பக்தர்கள் புடைசூழ யானை மற்றும் இரு குதிரைகள் சகிதம் நேற்றுமாலை வீதிவலம் வந்தார். இதில் ஐயப்ப பக்தர்கள் நூற்றுக் கணக்கானோர் புடைசூழந்து வந்தனர். ஐயப்பபக்தர்கள்நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் வைத்து இருமுடி தரித்துக் கொண்டனர். அதன் பின்னர் ஐயப்ப சுவாமி சகிதம் அங்கிருந்து யாழ்ப்பாண நகருக்கு வீதிவலம் வந்து வந்தனர். யானைமுன்னேயும்தொடர்ந்து இரண்டு குதிரைகளும் தொடர்ந்து பக்தர்கள் புடை சூழ ஐயப்ப சுவாமியும் வீதிவலம் வந்தார். இந்த ஊர்வலம் கோண்டாவில் ஐயப்ப சுவாமிகோவிலைச்சென்றுநிறைவடைந்தது. (து)

## கிண்டலுக்கு மோடி பதில்



நெருப்பு வளைய சூரிய கிரகணம் காலை 8 மணிக்குத் தொடங்கி உலகின் பல இடங்களில் தெரிந்தது.


இந்த நிலையில் இந்தியப் பிரதமர் மோடி சூரிய கிரகணம் குறித்து தனது டுவிற்றர் பக்கத்தில், "இந்தியர்கள் பலரைப் போல மேகமூட்டத்தால் என்னால் சூரிய கிரகணத்தைப் பார்க்க முடியவில்லை" என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் 'Gappistan Radio' என்ற ட்விட்டர் பக்கம், மோடி கண்ணாடி அணிந்திருக்கும் புகைப்படத்தைப் பதிவிட்டு, "உங்கள் புகைப்படம் மீம் ஆக மாறி வருகிறது" என்று பதிவிட்டிருந்தது.

ட்வீட்டை பிரதமர் மோடி குறிப்பிட்டு, "மிகவும் வரவேற்கிறேன் .... மகிழுங்கள்" என்று பதிலளித்தார். இதனைத் தொடர்ந்து நெட்டிசன்கள் பலரும் 'கூலஸ்ட் பிரதமர்' என்று பதிவிட்டு வருகின்றனர்.



## கால இடைவெளி



## சிரிக்க முடியல சாமி_ 😁😁😁






## twitter

@CarbonKaradi
சேறென்றும் சகதியென்றும் விலகுகிறார்கள், தேங்கி நிற்பதோ ஒரு ஆகாயம்!

@mrithulaM
'கவலைப்படாதே' என்பதை விட 'நான் பாத்துக்கிறேன்' என்பதே சிறந்த ஆறுதல்!

@Senthilbds
குறைகுடம் எனக்கூறி கல்லெறிந்து கொண்டே இருந்தனர், ஒரு கட்டத்தில் எறிந்த கற்களைக் கொண்டு நிரம்பத் தொடங்கியது அக்குடம்.

@adhavanKSM
எல்லோர் மனதும் கண்ணாடி போலத் தான்... உடைந்து போன தருணங்களில் அனைவரையுமே விகாரமாகத்தான் பார்க்கிறது!









# பொது அறிவித்தல் -2020
## நல்லூர் பிரதேசசபை, நல்லூர்

| இல | விடயம் | தொடர்பு பட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதன வரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 2020ம் ஆண்டுக்கான ஆதன வரியை 31.01.2020ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15%உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2020ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டம்/பிரசட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், எல்லைச்சுவர் அமைக்கப்படல் வேண்டும்<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC)பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 04 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். |
| 05 | வியாபார அனுமதிப்பத்திரம் 2020 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை கொக்குவில்,நல்லூர் ஆகிய உப அலுவலகங்களில் 2020ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2020ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2020ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத்வர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 06 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2020.03.31ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவல கங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2020ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 07 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2020.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2020ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். |
| 09 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள்,நடைபாதை வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள்,மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள் ளது.சுகாதாரத்திற்கு ஒவ்வாத அனுமதியற்ற நடமாடும் சுண்டல் ,சோளம் மற்றும் தீன்பண்டவிற்பனை தடைசெய்யப்படுகின்றது. |
| 10 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையம் மற்றும் கொண்டுதிரிந்து விற்போர் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33ஆம் இலக்க 2017.09.01ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக அனுமதியின்றி வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 12 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2020ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2020ஆம் ஆண்டு பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/புதுப்பித்துக்கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 13 | தரகர் முறை நீக்கல் கழிவுநடைமுறைக்கு தடை | சந்தைக் குத்தகையாளர்கள், சந்தை வியாபாரிகள் | எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறும் ,நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவுமுறை முற்றாக தடை செய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படு கின்றது. |
| 14 | இரசாயனமருந்து விசிறிய பழங்கள் | பழவியாபாரிகள் | அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 15 | கட்டாக்காலிகள் | நாய்,ஆடு,மாடு வளர்ப்போர் | பொதுவீதியில் அலைந்துதிரியும் கட்டாக்காலிகள் சபையால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். |
| 16 | கழிவுநீர் | பொதுமக்கள்,வியாபார நிலையங்கள் | பகிரங்கவடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக்கழிவுநீர்,வியாபாரகழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்ட விரோதமானது என உரியவர்கள்மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 17 | பொதுப்போக்குவரத்து மற்றும் டெங்கு இடையூறான பெரும்கட்டுமான பொருட்கள் | பொதுமக்கள்,அரச,தனி யார்நிறுவனங்கள்,கட்டு மான ஒப்பந்தகாரர்கள் | பொதுவீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்துவைத்தல்,உரியகுறியீடுகள் காட்சிப்படுத்தாதுவிடல்மற்றும் டெங்குநோய்காவி பரவும் ஆபத்தான நிலைமைகளை பேணுதல் தவிர்க்கப்படவேண்டும் |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தா.தியாகமூர்த்தி
தவிசாளர், நல்லூர் பிரதேசசபை, நல்லூர். **021-222-2700, 021-300-2508**

(in.12088) (13.17)

கூட்டமைப்பு...
இது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடல்ல. நாங்கள் எங்கள் பக்கத்திலிருந்து சமாதானக் கைகளை நீட்டுவதற்கான சமிக்ஞை அரசு இப்போது கொடுக்கவில்லை. அதற்கு மாறான சமிக்ஞையைக் கொடுக்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர், யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு நல்லிணக்க அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் பல தசாப்தங்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நானும் எமது கட்சியின் தலைவர் சம்பந்தனும் கலந்து கொண்டிருந்தோம். அதற்கு பல காரணங்கள் இருந்தன. நல்லிணக்க சமிக்ஞைகள் பல இருந்தன. தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டது மட்டுமல்லாது அப்போது ஜனாதிபதி மைத்திரிபால தனது உரையில் போர் வெற்றியைக் கொடூரமான நிகழ்வு என்று கூறியிருந் தார்.

பல நல்லிணக்க சமிக்ஞைகள் தென்பட்டன. அவ்வாறு இருந்த சூழ்நிலை மாறுபட்டு இன்று நல்லிணக்கத்துக்கு மாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. தமிழில் தேசிய கீதம் பாடப்படமாட்டாது என்று கூறுவது அதில் சிறிய அங்கம் மட்டுமே. அரசின் போக்கு முற்று முழுதாக மாறியிருக்கின்றது. இது நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடு அல்ல. நாங்கள் எமது பக்கத்திலிருந்து சமாதானக் கைகளை நீட்டுவதற்கான சமிக்ஞைகளை அரசு இப்போது கொடுக்கவில்லை. அதற்கு மாறான சமிக்ஞைகளையே கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

தமிழில் தேசிய கீதம் பாடவேண்டாம் என்று அவர்கள் உத்தரவு கொடுத்தால் அதனுடைய கருத்து தமிழ் மக்கள் தேசிய கீதம் பாட வேண்டாம் என்றே சொல்லுகின்றார்கள். தமிழ் மக்களை தேசிய கீதம் பாட வேண்டாம் என்று சொன்னால் நாங்கள் சந்தோசமாக பாடாமல் விட்டு விடுவோம். ஏனென்றால் தேசிய வாழ்க்கையில் இருந்து தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு பல தசாப்த காலங்கள் ஆகியிருக்கின்றன. முதலாவது குடியரசு அரசமைப்பு உருவாக்கத்தில் இருந்தே நாம் அதனைச் சொல்லி வந்திருக்கின்றோம். எங்களின் நியாயமான ஜனநாயக கோரிக்கைகள் ஏற்கப்படாமல் இருந்த காரணத்தால் நாங்கள் தேசிய வாழ்க்கையில் இருந்து விடுபட்டவர்களாக எங்களை கணித்திருக்கின்றோம். இதில் இருந்து மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாக இருந்தால் மிக முக்கியமாக அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அப்போதுதான் நாங்கள் சமமான குடிமக்களாக இந்த நாட்டில் வாழ முடியும். தேசிய வாழ்க்கையில் இருந்து விலக்கி வைக்கின்ற நிகழ்வின் இன்னொரு அடையாளமே தமிழில் தேசிய கீதம் பாட வேண்டாம் என்று கூறுவது.

பாடுவதல்ல முக்கியமான விடயம். தமிழ் மக்கள் தேசிய கீதம் பாடுவதையும் தடுக்கின்ற போக்கிலே அரசு போய்க் கொண்டிருக்கின்றது.


நாங்கள் பாட வேண்டும் என்று வரிந்து போய்க் கேட்கவில்லை. எங்களை பாட வேண்டாம் என்றால் நாம் சந்தோசமாக பாடாமல் இருக்கின்றோம். ஆனால் ஒரு நாட்டுக்குள்ளே இருக்கின்ற தேசிய இனங்களுக்கு இடையே ஒப்புரவு, நல்லிணக்கம் என்பவற்றை முற்றுமுழுதாக முறியடிக்கும் செயற்பாட்டை அரசு செய்து வருகின்றது என்பதனை நாம் அரசுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றோம்- என்றார்.

(ஒ.5,105,106.ரி1)

**Biology (உயிரியல்)**
பிரபல்ய பட்டதாரி ஆசிரியரினால்
தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில்
தனி மற்றும் குழுவாகக் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 1625 638

**பணிப்பெண் தேவை**
யாழ் நகரில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை.
077 327 6502

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லி சபாபதி**
(ஓய்வு பெற்ற தெல்லிப்பழை வைத்தியசாலை பணியாளர்)

தோற்றம்
13.12.1941

மறைவு
28.12.2017

நீங்கள்
பெரும் விருட்சமாக இருந்தீர்கள்
இன்னும்
உங்கள் நிழலில்த்தான்
நாங்கள்

காலங்கள் கரைந்து
கடந்தாலும்
அணையாத அமர ஜோதியாய்
எமக்கு
என்றும் ஒளி கொடுப்பீர்கள்

ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெகதீஸ்வரி காசிநாதன்



தோற்றம் 08.01.1953 மறைவு 27.12.2019

யாழ் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் நயினாதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி காசிநாதன் நேற்று (27.12.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னைநாள் வேலணை பிரதேச சபை ஓய்வுநிலை உத்தியோகத்தர். காசிநாதனின் அன்பு மனைவியும் அகிலாவின் (நோர்வே) தாயாரும் முருகேசு ராஜஜேஸ்இன் (நோர்வே) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் துரைரெத் தினம் நாகலெட்சுமி, மகேஸ்வரன், தேவராசா, வசந்தராசா, விஜயலெட்சுமி (பொன்னு) ஆகியோரின் மைத்துனியும் சந்திரகாந்தி (ஓய்வுநிலை ஆசிரியர்), சகுந்தலாதேவி, ஜெயலச்சுமி, புஸ்பராணி, வரதராஜா, நந்தகுமார் ஆகியோரின் சகோதரியும் வாம தேவன், காலஞ்சென்ற குணரெத்தினம் ஆகியோரின் சகலனும் பிரணயாவின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சல்லி பரவை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 811 2884
தகவல் : குடும்பத்தினர்

## சேவைநலன் பாராட்டு



Best wishes



வேலணைப்பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றி 28.05.2019 அன்று ஓய்வுபெற்ற
**கந்தையா பரமேஸ்வரன்**
அவர்களின் சேவையினை பாராட்டுவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வேலணைப்பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றி 25.10.2019 தொடக்கம் நிர்வாக கிராம அலுவலராக பதவியேற்றுச்சென்ற
**செல்லத்துரை சிவா**
அவர்களின் சேவையினை பாராட்டுவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேசசெயலரும் அனைத்து உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம், தீவகம் தெற்கு வேலணை

## அலுவலகத்திற்கு கட்டடம்/ வீடு வாடகைக்கு தேவை

அரச - வெளிநாட்டு நிதி (JICA) யின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற "றிடெப்" செயற்திட்டத்தின் திட்ட ஆலோசகர் அலுவலகத்திற்கு கட்டடம் / வீடு பின்வரும் வசதிக்கமைவாக அவசரமாக தேவையாக உள்ளது.

01. தள விஸ்தீரணம் 1200 ச.அடியிலிருந்து 2500 ச.அடி வரை குறைந்தது 4 அறைகள், பெரிய மண்டபம் (Hall)
02. குறைந்தது இரு கழிவறைகள்.
03. குறைந்தது மூன்று வாகனத்தரிப்பிட வசதிகள்.
04. யாழ் பிரதான வீதியிலிருந்து 3 - 4 கி.மீற்றர் தூரத்தில் விரும்பத்தக்கது.
05. அரச அலுவலகமாகையால் முற்பணம் கொடுக்கப்படமாட்டாது.
06. மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்த தொகை மாதாந்த வாடகையாக கொடுக்கப்படும்.

இல.225, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள றிடெப் திட்ட வடமாகாண அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தை 30.12.2019 இருந்து 08.01.2020 ஆம் திகதி 2.00 மணி வரை பெற்று அத்தினம் 3.00 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலதிக தகவல்களுக்கு : 021 - 221 4378/ 021 - 221 4277 இலக்க தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**செயற்திட்டப் பணிப்பாளர் - றிடெப்**
**வடமாகாணம்.**

## 77 பேரின்...

தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 126 பேர் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய 77 பேரின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, பரீட்சை பெறுபேறு மீளாய்வுக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ.5)

## நாட்டை...

கெடுக்கும் வகையிலான பாடப்புத்தகங்களை வழங்கி வருகின்றனர். அந்த நபர்கள் மற்றும் தரப்புகளுக்கு எதிராக மகாநாயக்க தேரர்களின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கையெடுக்கப்படவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை பௌத்த மத பாடசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது.

அடிமட்டத்திலிருந்து மாணவர்களின் மனதை திரிவுபடுத்தும் வகையில் நாட்டைப் பிளவுப்படுத்த நினைக்கும் சில தரப்பினர் பல்வேறு புத்தகங்களை வழங்கிவருகின்றனர். இதன்மூலம் மாணவர்கள் மனதில் நாட்டை பிளவுப்படுத்துவதற்கான கருத்துக்களை விதைக்கின்றனர்.

அவை அனைத்தும் வெளிநாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் அனுப்பும் நிதியில்தான் இடம்பெறுகின்றன. அவர்கள் இந்நாட்டின் கல்வி கட்டமைப்புக்குள் மிகவும் சூட்சுமமாக உள்நுழைந்து வருகின்றனர்.

கடந்த அரசின் காலத்தில் அரசால் வழங்கப்பட்டுள்ள ஒரு புத்தகத்தில் வடக்கும் கிழக்கும் ஒரு மாகாணமாக நிறந்தீட்டப்பட்டு அவை இரண்டும் ஒரு மாகாணமாக கூறப்பட்டுள்ளது.

அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ஒரு புத்தகத்திலும் மாணவர்களின் மனதை திரிவுபடுத்தும் வகையிலான பகுதியொன்று உள்ளது. திட்டமிட்ட வகையில் ஒருசில தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க மகாநாயக்க தேரர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள உள்ளோம்.

விகாரைகளில் அறநெறிக் கல்வியை பெற்றுக் கொள்ளாத தரப்பினர் கடந்த காலத்தில் பௌத்த மதத்துக்கு எதிராக செயற்பட்டதைக் காணக் கூடியதாகவிருந்தது. அறநெறிக் கல்வி அறிவை மேம்படுத்திக்கொள்வதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது பிள்ளைகளின் சிந்தனை மற்றும் அவர்களது வாழ்வியலை நெறிப்படுத்துவதாக அமைய வேண்டும். எந்தவொரு மதமும் அடிப்படைவாதத்தை போதிப்பதில்லை - என்றார். (ஒ.5,24,110)

## 47 பவுண்...

வருவதாவது:

வீட்டில் கொழும்பில் இருந்து வந்தவர்கள் தங்கி நின்றுள்ளனர். இந்த நிலையில் நேற்று அதிகாலை 1 மணியளவில் கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் முகங்களை மூடியவாறு இருவர் வந்துள்ளனர். அவர்கள் மதிலுக்குப் பின்னால் மறைந்திருந்ததை வீட்டின் உரிமையாளர் கண்டுள்ளார். அவர் சத்தமிட முனையவே, அவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி வீடு புகுந்து பொருள்களைத் தேடியுள்ளனர்.

தாலிக் கொடி உள்ளிட்ட 47 பவுண் நகையைக் கொள்ளையடித்து தப்பிச் செல்ல முயன்றபோது வீட்டுக் காரர்கள் அவலக் குரல் எழுப்பியுள்ளனர். அயலவர்கள் சூழ்ந்து கொள்ளையர்களை விரட்ட, அவர்கள் தாம் வந்த மோட்டார் சைக்கிளையும் விட்டு ஓடித் தப்பினர். மோட்டார் சைக்கிளை மீட்ட பொலிஸார், அதனை அடிப்படையாக வைத்து சந்தேக நபர்களை இனங்கண்டுள்ளனர். அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்த தம்பதியினர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ.5,9)

## கைது...

பட்டுள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். ஒருவர் தப்பியோடியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மதியமளவில் இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர்கள் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்கள். 20 வயது மற்றும் 57 வயதுடையவர்கள். இரண்டு பெரல்களில் காச்சிக் கொண்டிருந்த ஐம்பது லீட்டர் கசிப்பும், கோடா பரல் ஒன்றும், கசிப்பு உற்பத்திபொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,26)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஹம்சுஜா கனேசலிங்கம்



நேற்று 27 ஆம் திகதி 5ஆம் பக்கத்தில்
வெளிவந்த நினைவஞ்சலிக்கு
உரிய படம்.

புத்தூர் கிழக்கு. குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரியின் முன்னாள்
வருகைதரு விரிவுரையாளர்
(நூலக விஞ்ஞானம்)

அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்

(பிரதம நூலகர் - யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்

கண்ணீர் அஞ்சலி



எங்கள் தேவஸ்தானத்தின்
திருப்பணிச்சபையில்
(1968ஆம் ஆண்டு காலப்
பகுதியில்) தனாதிகாரியாக
பணியாற்றிய

வேலுப்பிள்ளை செல்வரட்ணம்

அவர்கள் இறைபதம்
அடைந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபையினர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

மரண அறிவித்தல்

பிறப்பு 06 * 09 * 1966



இறப்பு 26 * 12 * 2019

அமரர்.
திரு விஜயசுந்தரம் சிவகுமாரன்
(FCMA, FCPA)

வெலிக்கந்தோட்டம், துன்னாலை வடக்கை சேர்ந்த விஜயசுந்தரம் சிவகுமாரன் 26.12.2019 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலம் சென்ற ஆறுமுகம் விஜயசுந்தரம் திருப்புவனேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வரும் கதிர்க்காமத்தம்பி புனிதவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் குமதினியின் அன்புக்கணவரும், சிவசக்தியின் பாசமிகு தந்தையும், காலம் சென்ற ஆறுமுகம் அமிர்தலிங்கத்தின் பெறாமகனும், தேவிகருணாகரி, இந்திராதேவி, மனோகரி, வசீகரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், விஜயசிங்கம், கணபதிப்பிள்ளை, காலம் சென்ற அருளானந்த சிவா, காலம் சென்ற தேவதாசன், கருணாநிதி, தயாநிதி ஆகியோரின் மைத்துனரும், ஆனந்தராசா, அமிர்தகுமாரி, ஆதவராசா, அருள்ராசா, ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் 174/74, Lanciaheana Road, Alwis Town Hendala, Wattala அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 10.30 மணியளவில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று கெரவலப்பிட்டிய மயானத்தில் பி.ப 1.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : சி. குமுதினி (மனைவி) - 0764050859
தே. வசீகரி (வசந்தி - சகோதரி) - 0775482872

Chemistry (இரசாயனவியல்)
பட்டதாரி ஆசிரியரினால்
தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில்
தனி மற்றும் குழுவாகக் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 2384 553

வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கண்டி வீதி அரியாலையில் 2 AC Rooms உட்பட 9 Rooms 4/Bathrooms 4 வாகனத்தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 077 712 6859

ENGLISH PERSONAL CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்
அனுபவம்மிக்க ஆசிரியரினால்
உங்கள் வீடுகளுக்கு வந்து
கற்பிக்கப்படும்.
077 658 9443 யாழ்ப்பாணம்.

காணி விற்பனைக்கு
நாவற்குழி கடற்கரை 15
ஏக்கர் மேட்டுக்காணி உடன்
விற்பனைக்கு. தென்னைக்கு
மிக உகந்த இடம்.
தொடர்பு - 077 725 0587
076 835 9276

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு
சங்கம் (வ/து)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
எமது சங்கத்துக்கு
1. சிற்றுண்டிச்சாலை நடத்தக் கூடியவர்
2. பொருள்கள் பொதியிடல் செய்பவர்
வேலைக்குப் பணியாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
30.12.2019 இல் நேரில்
சமூகமளிக்கவும்.
தொலைபேசி இல:- 021 222 2143
பொதுமுகாமையாளர்.

வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (12.12.2019)
வியாழக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர்
இராமதாஸ் சசிகரன்
அவர்களின் சிவபதப்பேறு
குறித்த வீட்டுக்கிரியைகள்
29.12.2019 ஞாயிற்றுக்
கிழமை மு.ப 11.00
மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின்
ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து மஞ்சத்தடியில்
அமைந்துள்ள அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய
மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனை தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மஞ்சத்தடி. இணுவில் கிழக்கு
இணுவில்.
குடும்பத்தினர்

## உள்ளதையும்...

பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதத்தில் செயலாற்றவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் ஆசனப் பங்கீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில், மாவை.சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சி.சிறீதரன், புளொட் சார்பில் த.சித்தார்த்தன், க.சிவநேசன், ராகவன், ஜி.ரி.லிங்கநாதன், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், க.விந்தன், சுரேன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற ஆசனப் பங்கீடு தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டன. மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான ஆசனப் பங்கீட்டில் இணக்கம் காணப்படவில்லை. இந்த மாவட்டங்களில் தமிழ் அரசுக் கட்சி கூடிய இடங்களைக் கேட்பதால் பங்காளிக் கட்சிகள் இணங்கவில்லை என்று தெரியவருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக ரீதியாக ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆசனப் பங்கீடு தொடர்பில் எதிர்வரும் 3ஆம் திகதி, கட்சித் தலைவர் சம்பந்தன் தலைமையில் கொழும்பில் மீண்டும் ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் போட்டியிடுவது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இந்த விடயத்தைக் கவனமாகக் கையாளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)


## Walk in Interview

**எழுது வினைஞர்**

பத்திரிகை நிறுவனத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றுவதற்கு ஆர்வமும், தகுதி-தராதரமும் உடையவர்கள் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

காலம்: 29.12.2019, மு.ப.11.00-12.00 வரை
இடம்: New Uthayan Publication (pvt) Ltd
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## மீண்டு...

உறுதி. இவ்வாறு முன்னாள் அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் ராஜித சேனாரத்ன, வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பான வழக்கில் நேற்றுப் பிற்பகல் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கைதுசெய்வதற்குச் சில நிமிடங்களுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் உரையாடியுள்ளார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'ராஜபக்ச அரசின் அரசியல் பழிவாங்கலினால் எமது அரசியல் பணிகள் ஸ்தம்பிதம் அடையக்கூடாது. நாடாளுமன்றத் தேர்தலில் இந்தப் பழிவாங்கல் நடவடிக்கைக்கு நாம் தக்க பாடம் புகட்ட வேண்டும். எனவே, அதுவரை எமது மக்களைப் பொறுமையுடன் இருக்குமாறு சொல்லுங்கள்' என்று இதன்போது ராஜித எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5.22)

## அடுத்தது...

ளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பில் பொய் கூறினார் என்று குற்றம்சாட்டி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பிக்க ரணவக்கவுக்குப் பின்னர் ராஜித சேனாரத்ன கைது செய்யப்படுவார் என்று எமக்கு ஏற்கனவே தெரியும். இது ராஜிதவுக்கும் தெரிந்த விடயம். அதுதான் அவர் முன்பிணை கோரி நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீது எதிர்வரும் 30ஆம் திகதி விசாரணை நடைபெறவுள்ள நிலையில், அதற்கிடையில் ராஜித கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோத்தாபய அரசின் இந்தத் திட்டமிட்ட கைதுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பில் பகிரங்க வாதம் மற்றும் பகிரங்க விசாரணை நடத்த வக்கற்ற இந்த அரசு ராஜிதவைப் பழிவாங்கும் நோக்கில் கைதுசெய்துள்ளது.

சட்டமா அதிபருக்கு இந்த அரசு மறைமுகமாகக் கொடுத்த அழுத்தத்தின் பிரகாரம்தான் ராஜிதவைக் கைதுசெய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. எனினும், வழக்கு விசாரணையின்போது நீதிமன்றம் நடுநிலையுடன் நீதியை வழங்கும். அந்த நல்ல தீர்ப்புக்காக நாம் காத்திருக்கின்றோம் -என்றார். (ஒ.5,22)

## நிதியை...

நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த அரசின் காலத்தில் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஒப்பந்தகாரர்கள் பணிகளை முடித்துவிட்டார்கள். அதற்குரிய பணத்தைக் கோருகின்றார்கள். அரசு அந்தப் பணத்தை நிறுத்தி வைத்துள்ளது. அதேபோல நடந்து கொண்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளுக்குரிய பணங்களும் வழங்கப்படவில்லை. இவற்றை உடனடியாக விடுவிக்குமாறு பிரதமரும், நிதி அமைச்சருமான மஹிந்தவைச் சந்தித்துக் கோருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஹெரோயினுடன்...

கிராம், 5 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் வித்தகபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,26)

## வெள்ளை...

ணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)


# 60 ஆவது பிறந்ததின நினைவு நாள்



அமரர் திருமதி
## நிர்மலன் சிவநேசம்

தரணியில் 31.12.1959
விண்ணில் 20.11.2019

20.11.2019 புதன்கிழமை அன்று மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப்பிள்ளையார் பதமடைந்த அமரர் இராமலிங்கம் நிர்மலன் (கவி தொலைத்தொடர்பகம், செல்வன் வீடியோ உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவி அமரர் நிர்மலன் சிவநேசம் அவர்களின் 60 ஆவது பிறந்ததின நினைவாக இன்று (28.12.2019) சனிக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும் "கண்பார்வை அற்றவர்களின் தமிழிசை" நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள்**
காலஞ்சென்ற கவிதா, பூரணச்செல்வன் (பூரணா மல்ரிசொப் - சாவகச்சேரி), நளாயினி.

**மைத்துனிகள்**
காலஞ்சென்ற யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), மங்களேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), காலஞ்சென்ற மதுரேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), சுதந்திரா (கொழும்பு).

**மைத்துனர்கள்**
காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற V.T நடராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்), ஐ.சின்னத்துரை (ஓய்வுபெற்ற பரீட்சைகள் ஆணையாளர், கொழும்பு), காலஞ்சென்ற சு.சிறிதரன் (முன்னாள் பொதுமுகாமையாளர், கைதடி - சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்)

**மருமக்கள்**
நந்தகுமார் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்), உதயகுமார் (கனடா), சுந்தரகுமார் (பிரதிப்பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்), மாலதி (கனடா) காலஞ்சென்றவர்களான சுகந்தினி, கோபிராஜ், இரவிராஜ் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்) மற்றும் இன்பராஜ் (லண்டன்), வாசுகி (சட்டத்தரணி, கனடா), நந்தினி (நியூசிலாந்து), தயாளினி (நியூசிலாந்து), மயூரன் (ஆஸ்திரேலியா), குமரன் (கொழும்பு), குமரேசன் (பாங்கொக்), செந்தூரன் (கொழும்பு), சுபத்திரன் (சவுதி), பார்த்தீபன்

**மருமகன்** - இராஜபிரசாத் (Sierra - Batticaloa)

**பேரப்பிள்ளைகள்** - தஸ்வின், பிரகவி, மயூபிரசாத்

**இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி**

# மார்கழி மாதம்

## பக்தியின் வழி இறையருளை பெறும் மங்கல மாதம்

இராமநாதபுரத்தூர் நிஷாந்தன்



இந்து மக்களின் இறை வழிபாட்டுக்குரிய சிறப்பான மாதமாக விளங்குவது மார்கழி மாதமாகும். ஏனெனில் இறை வழிபாடுகள் அதிகளவில் இயற்றப்படுவது இந்த மாதத்திலேயாகும். எனவே தான் பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில், மாதங்களில் நான் மார்கழி என உரைத்தருளினார். அது மட்டுமன்றி இந்த மார்கழி மாதமே, தேவர்கள் தம் உறக்கத்தில் இருந்து விழித்தெழும் மாதமாகும். ஆகவே இம் மாதம் தேவர்களின் மாதம் எனவும் அழைக்கப்படுகின்றது. அத்துடன் தேவர்களுக்கு இம் மாதம் அதிகாலைப் பொழுதாகவும் விளங்குகின்றது. ஆகவே இம் மாதத்தில் அதிகாலைப் பொழுதில் நாம் வழிபாடு இயற்றுவதும், ஆலய தரிசனம் செய்வதும் எம் வாழ்வில் நன்மையைத் தந்திடும். குறிப்பாக இம் மாதத்தில் இறை வழிபாடு மட்டுமே செய்ய வேண்டும் என்பதனால் இந்து மக்கள் பெரும்பாலும் தங்களது இல்லங்களில் மங்கலகரமான சுப நிகழ்வுகள் எதனையும்; நடத்தப்படுவதில்லை. மாறாக இறைவனது சிறப்பு வழிபாடுகள் மட்டுமே இந்த மாதத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆகவேதான் இம் மாதத்தினை பீடுடைய மாதம் அதாவது பெருமை மிக்க மாதம் என கருத்துரைக்கின்ற புராணங்கள். ஆக, இத்தகைய மார்கழி மாதத்தில் இழையோடுகின்ற இறையியல் சிறப்பம்சங்களை இங்கு காண்போம்.

### மார்கழி விரதங்கள்

மார்கழி மாதத்தில் விரதங்களுக்கு குறைவில்லை. அதிகாலையில் வழிபாடியற்றுவது இம் மாதத்தின் தனிச்சிறப்பாகும். அந்த வகையில் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் திருவெம்பாவை, விஷ்ணுவைக் குறித்து இயற்றப்படும் திருப்பாவை அதோடு வைகுண்ட ஏகாதசி, மேலும் ஐயப்ப சுவாமி விரதம், விநாயகர் எனப் பல வகையான விரதங்கள் இம் மாதத்தில் சிறப்புப் பெறுகின்றன.

### திருவெம்பாவை வழிபாடு

மார்கழியில் வரும் முதன்மையானதாக விரதம் திருவெம்பாவை. மாணிக்கவாசகர் இவ்விரத மகிமை பற்றி பாடுகின்றார். அதாவது, கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து நீர் நிலையில் நீராடி உள்ளத்தில் பொங்கும் அன்பினால் சிவபெருமான் புகழையும், பெருமையையும் திருப்பள்ளியெழுச்சி மற்றும், திருவெம்பாவைப் பாடல்களின் ஊடாக மார்கழி மாதத்தில் பத்து நாள்கள் பாடி வழிபடுவதாக இந்த விரதம் சிறப்புறுகின்றது. திருவெம்பாவை வழிபாட்டின் சிறப்பியலை தனது திருவெம்பாவை எனும் பதிகத்தின் ஊடாக அழகுற எடுத்துரைக்கின்றார் மணிவாசகர். அதில் உள்ள பாடல்களில் இதுவும் ஒன்று.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின் செவி
தான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி
போய் வீதி வாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி
மெய்ம் மறந்து போதார் அமளியின் மேல் நின்
றும் புரண்டு இங்ஙன் ஏதேனும் ஆகாள் கிடந்
தாள் என்னே என்னே ஈதே எந்தோழி பரிசே
லோர் எம்பாவாய் இவ்வாறு திருவெம்பாவை விரத்தின் சிறப்பு மேன்மையுறுகின்றது.

### திருப்பாவை விரத மகிமை

திருவெம்பாவை விரதம் சிவனுக்கு என்றால் திருப்பாவை விரதம் விஷ்ணுவுக்கு உரியதாகும். விஷ்ணுவைக் குறித்து திருப்பாவை விரதமும் மார்கழி மாதத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது. மார்கழி மாதம் முப்பது நாள்களும் இவ் விரதம் அனுஸ்டிக்கப்படுகின்றது. ஆண்டாள்தான்வாழும்வில்லிபுத்தூரை ஆயர்பாடி கோகுலமாக பாவனை செய்து, தன்னையும், தன் தோழியரையும் கோபியர்களாக பாவனை செய்து ஆயர்பாடியில் வாழும் கண்ணன் புகழ் பாடி அவனை போற்றித் துதிக்கின்றனர். அதன்படி அதிகாலையில் எழுந்த நீராடி கண்ணனின் பெருமைகளைப் பாடி வழிபடுவதாக விளங்குவது திருப்பாவை நோன்பாகும். இந்த விரத காலத்தில் ஆண்டாள் அருளிய திருப்பாவை பாடல்கள் படிக்கப்படும் மரபு சிறப்புறுகின்றது. அதில் ஒரு பாடலைக் காண்போம்...

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராட போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர் வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான
பாரோர் புகழப் படிந்து ஏல் ஓர் எம்பாவாய்

இவ்வாறு திருப்பாவையில் உள்ள அனைத்து பாடல்களும் மனதை பக்தி வழியில் செலுத்துவனவாகும். குறித்த இந்த திருவெம்பாவை, மற்றும் திருப்பாவை ஆகிய இவ்விரு விரத காலங்களிலும் சிவன் மற்றும் விஷ்ணு ஆலயங்களில் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி, மற்றும் நாமசங்கீர்த்தனங்கள், பஜனை, அவற்றோடு மேற் குறித்த திருவெம்பாவைப் பாடல்கள், திருப்பாவை பாடல்கள் ஆகிய படிக்கப்படுகின்றன.

### மோட்சம் தரும் வைகுண்ட ஏகாதசி

இந்த விரதங்கள் தவிர விஷ்ணு பகவானின் கருணையைப் பெறும் வைகுண்ட ஏகாதசி விரதமும் மார்கழி மாதத்திலேயே வருகின்றது. விஷ்ணுபகவான் வைகுண்டத்தில் இருந்து சொர்க்கலோகம் வருகை



தந்து திருவருள் பாலிக்கின்றதும் இம் மார்கழி மாதத்தில் நடைபெறும் அருட் செயலாகும். இந்த சிறப்பான நாளில் வைகுண்ட வாசல் அல்லது சுவர்க்க வாசல் திறத்தல் எனும் தெய்வீக செயலானது நடைபெறும். மேலும் இறந்தவர்களின் ஆத்ம மோட்சத்திற்காக மோட்ச அர்ச்சனை செய்தல் எனும் அரிய கைங்கரியமும் இந்த நாளில் மேற்கொள்ளப்படுகின்றது.

### மார்கழியில் மேலும் சிறப்புத் தருவன

இந்த மார்கழி மாதத்தில் மேலும் பல நிகழ்வுகள் அரங்கேறியுள்ளமையைக் காணலாம். இம் மாதத்திலேயே பாண்டவர் மற்றும் கௌரவர்களிடையே குருசேத்திரப் போரானது நடைபெற்றது என மகாபாரத காப்பியம் கருத்துரைக்கின்றது. தவிர பகவான் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு பகவத் கீதையை உபதேசித்ததும், தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடல் கடைந்ததும், இராம பக்தனாக விளங்கும் ஆஞ்சநேயர் அவதரித்ததும் இம் மார்கழி மாதத்திலேயாகும். இது மட்டுமன்றி இந்தியாவின் சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனமும், திருவரங்கத்தில் சுவர்க்க வாயில் திறப்பும் வெகு சிறப்பாக நடைபெறுவதும் இம் மாதத்திலேயாகும்.

### மார்கழியில் சிறப்போம்

மார்கழி மாதம் வழிபாட்டுக்குரிய மாதம் அல்லவா? அதனால் ஆலயங்கள் நம் இல்லங்களிலும் இறை வழிபாடுகள் சிறப்புற அரங்கேறுகின்றன. மார்கழி மாத்தில் ஓசோன் படலமானது பூமிக்கு மிக அருகில் இருக்கின்றதாம். எனவே பிராண வாயு எனப்படும் தூய்மையான வாயு இம் மாதத்தின் அதிகாலை வேளையில் வெளியாகின்றது. இதனால் தான் இந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடினால் உடல் நலன் பேணப்படும் எனக் கூறப்படு கின்றது. ஆகவே இந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி நம் இல்லத்திற்கு முன் அழகிய கோலங்கள் இடுவது மரபாகும். அதிலும் பெண்கள் கோலமிடுவதே சிறப்பானதாகும். அதிகாலைப் பொழுதில் தேவர்களை வரவேற்கும் வகையில் அந்தக் கோலங்கள் இடப்படுகின்றன என்பது புராணங்களின் வரையறையாகும். மேலும், திருமகள் நம் இல்லங்களில் குடி கொள்வதற்கும், மங்கலத்தின் அடையாளமாகவும் இத்தகு அழகிய கோலங்கள் இடப்படுகின்றன. மேலும், மார்கழி மாதத்தில் ஆலயங்களிலும், நமது இல்லங்களிலும் அதிகாலை வேளையில் பஜனைகள், நாம சங்கீர்த்தனங்கள் என்பன சிறப்புற நடைபெறும். அதிலும் சிறப்பாக இந்து பக்தர்கள் ஒன்றாக சேர்ந்து கூட்டமாக பஜனை பாடி ஒவ்வொரு வீதியாக வலம் வருவர். அது மட்டுமன்றி ஆலயங்களிலும் இத்தகு செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருவகின்றமையும் அவதானிக்க முடியும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நேற்று, இன்று, நாளை....?

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, பெரும் கண்ணாமூச்சியாட்டத்துக்குப் பின்னர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கைது ஏற்கனவே எதிர்பார்த்த ஒன்றாக இருந்தபோதும், எப்போது அந்தக் கைது நிகழும் என்பது மட்டுமே தெரியாமல் இருந்தது. இப்போது அதுவும் நடந்து முடிந்துவிட்டது.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கைதாகி, பிணையில் வெளிவந்திருக்கின்ற நிலையில், ராஜித உள்ளே சென்றிருக்கிறார். தான் சிறை செல்வதைத் தடுக்க அல்லது தள்ளிப்போட ராஜித ஆடிய சதுரங்க ஆட்டத்தால் தான் இந்தக் கைது விவகாரம் இத்தனை நாள்கள் இழுபட்டிருந்தது. முன்பிணை மனுக்கள் ஒவ்வொன்றாக நிராகரிக்கப்பட்ட போதும், சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தனாக மூன்றாவது முறையும் முன்பிணைக்கு விண்ணப்பித்துக் கொண்டே, சட்டென 'இதயவலி' வந்து லங்கா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறத் தொடங்கினார். வழக்கமாக அரசியல்வாதிகளுக்கு, கைதான பின்னரே இதயவலி வந்து, சகல வசதிகளும் பொருந்திய தனியார் வைத்தியசாலைக் கட்டிலில் 'ஹாயாக' படுத்து, ஓய்வெடுப்பர். ஆனால் ராஜித கொஞ்சம் முந்திக்கொண்டு, கைதாவதற்கு முன்னரே இதயவலி வந்து, வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருந்தபடி, சிறை செல்வதைத் தடுக்கும் உபாயங்களைத் தீட்டத் தொடங்கினார். இத்தனைக்கும், அவர் சிகிச்சை பெற்றுக் கொண்ட வைத்தியசாலை, ராஜபக்ச குடும்பத்தின ருக்குச் சொந்தமானது என்பதும் இதில் உள்ள முரண் நகை. இப்படி என்னதான் தகிடுதத்தம் செய்து, தலைகீழாக நின்றபோதும், கோத்தாபய ராஜபக்ச அரசின் கருணை ராஜிதவுக்குக் கிட்டவில்லை. எந்த வைத்தியசாலையில் படுத்திருந்தால் கைதைத் தள்ளிப்போடலாம் என்று ராஜித எண்ணினாரோ, அதே வைத்தியசாலைக் கட்டிலில் வைத்தே கடைசியில் ராஜிதவுக்கு கைவிலங்கு போடப்பட்டுள்ளது.

2015 இல் மஹிந்த வீட்டில் அப்பம் சாப்பிட்ட கையோடு, மைத்திரிபாலவை அழைத்துக் கொண்டு ஐ.தே.க தலைமையிலான கூட்டணிக்குத் தாவியவர் ராஜித. மைத்திரிபாலவை பொதுவேட்பாளராகக் களமிறக்கும் திட்டத்தின் சூத்திரதாரிகளில் அவர் முக்கியமானவர். அதனால் தான் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியானவுடன் ராஜிதவுக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்கி அழகு பார்த்தார். அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் பேச்சாளராகவும் ராஜிதவே இருந்தார். அந்தளவுக்கு மைத்திரியிடமும், ரணிலிடமும் செல்வாக்குப் பெற்றவராக ராஜித இருந்தார்.

'ஓவர் விசுவாசம் உடம்புக்கு ஆகாது' என்பது ராஜித விடயத்தில் உண்மையாகிப் போனது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவை வீழ்த்தும் கடைசி நாகாஸ்திரமாக, வெள்ளைவான் சாரதிகளின் ஊடக மாநாட்டை ராஜித நடத்தியிருந்தார். வெள்ளைவானில் கோத்தபாயவின் உத்தரவுப்படி பலரைத் தாம் கடத்தி கொலை செய்து, பிணங்களை முதலைகளுக்கு இரையாக்கியதாக 'ஒட்டு மீசையும் தாடியும்' வைத்த அந்தச் சாரதிகள் ஊடகங்களிடம் சொன்னார்கள். அப்போதே ராஜித இலக்கு வைக்கப்பட்டு விட்டார்.

கோத்தாபய வென்று ஜனாதிபதியானவுடன் பழிவாங்கும் படலம் ஆரம்பித்து , முதலில் சம்பிக்கவும்,இப்போது ராஜிதவும் சிறை சென்றிருக்கிறார்கள். நீதியை தன் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, நினைத்தபடி காய்களை நகர்த்துவது என்பது ராஜபக்ச குடும்பத்தினருக்குக் கைவந்த கலை. அந்தக் கலையை இப்போது கோத்தாபயவும் கையில் எடுத்திருக்கிறார். நேற்று சம்பிக்க, இன்று ராஜித, நாளை யாரோ? என்ற அச்சநிலையை உருவாக்குவதன் மூலம் தமக்கு எதிரான கருத்துடையோரை வாய்பொத்த வைக்கும் ராஜபக்சக்களின் தந்திரம் இம்முறையும் எடுபடுமா என்பதை நாடாளுமன்றத் தேர்தல் தான் புரியவைக்க வேண்டும்.

# எம்.சி.சி. உடன்பாட்டில் சூட்சுமமாக கையெழுத்து

## ஜே.வி.பி. கொதிப்பு



**கொழும்பு, டிசெ. 28**
**பொதுத் தேர்தலின் பின்னர் அமெரிக்காவுடனான எம்.சி.சி. உடன்படிக்கையை சூட்சுமமாகக் கைச்சாத்திடும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செயற்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.**

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு எதிராகவே புதிய அரசு செயற்படுகிறது. மேற்குலக நாடுகளுக்கு எதிரான கருத்துகளைத் தேர்தல் மேடைகளில் இவர்கள் முன்வைத்த போதும் இன்று அந்த நாடுகளின் அடியாள்களாக மாறியுள்ளனர். பொருளாதாரத்தை பற்றி பேசினர். ஆனால், அரிசி மற்றும் நெல் விலைகள் எதேச்சாதிகரமாக தீர்மானிக்கும் நிலைக்கு மாறியுள்ளன.

மேற்குலக நாடுகளின் ஆக்கிரமிப்புக்கள் இருக்கும் நாடுகளுக்கு பொருளாதாரம், போர், நல்லிணக்கம் தொடர்பிலான அழுத்தங்கள் கொடுக்கப்படும். கடந்த அரசின் காலத்தில் அவ்வாறான அழுத்தங்கள்தான் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த அழுத்தங்களுக்கு அடிப்பணிந்தே கடந்த அரசு செயற்பட்டது. அதற்கு எதிராகப் பெரிய அளவில் மக்கள் எதிர்ப்புகளை வெளியிட்டனர்.

அந்த மக்கள் எதிர்ப்பைத்தான் புதிய அரசு கொள்ளையடித்தது. தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தல் மேடைகளில் மேற்குலக நாடுகளுக்கும், ஐக்கிய அமெரிக்காவுக்கும் எதிரான கருத்துகளை வெளியிட்டனர். எம்.சி.சி. உடன்படிக்கைக்கு எதிராக எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். ஆட்சியை அமைத்த மறுநாளே இந்தப் பேச்சுக்களிலிருந்து வெளியேறியிருக்க முடியும். ஆனால், நடந்தது என்ன?.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் எம்.சி.சி தொடர்பில் முழுமையான தெளிவு இருக்கவில்லையென்பதால் அது தொடர்பில் ஆராயக் குழுவொன்றை நியமித்துள்ளதாகக் கூறினர். வெளிவிவகார அமைச்சரே அந்த அறிவிப்பை வெளியிட்டார். டிசெம்பர் 31ஆம் திக்திக்கு முன்னர் உடன்படிக்கையில் கைச்சாத்திடாவிட்டால் அதிலிருந்து வெளியேறுவோமென அமெரிக்காவும் கூறியது.

ஆனால், தற்போது இவர்கள் நியமித்துள்ள குழுவுக்கு காலஅவகாசத்தைக் கொடுத்துள்ளனர். மிகவும் சூட்சமாக இந்த உடன்படிக்கைக்கான் மத்தியஸ்தத்தை அரசு வகித்து வருகிறது. பொதுத் தேர்தலின் பின்னர் அதனைக் கைச்சாத்திட இடமுள்ளது - என்றார். (ஒ.5,24)

## நல்லூர் வளைவுக்கும் சபைக்கும் தொடர்பில்லை

யாழ்ப்பாணம்.டிசெ.28

செம்மணி வீதியில் நல்லூர் வரவேற்கின்றது என்ற அலங்கார வளைவு அமைக்கப்படுகிறது. அதற்கும் நல்லூர் பிரதேச சபைக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என்று சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் வளைவு அமைக்கப்படுவதாகத் தகவல் வெளியாகியிருந்தது. அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சபையின் ஒரு பக்க எல்லைக்குள் இந்த வளைவு அமைக்கப்படுகிறது. இதற்கு சபையிடம் இருந்து அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் அனுமதி பெறப்படவில்லை. அத்துடன் சபையின் நிதியில் வளைவு அமைக்கப்படவில்லை. ஆலய நிர்வாகத்தின் குழுவொன்றால் வளைவு அமைக்கப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சபையிடம் அனுமதி கோரினால் அனுமதி வழங்கத் தயார் என்றார்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தை அடையாளப்படுத்தும் வகையில் அலங்கார வளைவு அமைக்கப்படுகிறது. அதே வேளை வளைவுக்கான அடிக்கல் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால் நடப்பட்டது.

தற்போது வளைவு அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் சிற்பக் கலை நயத்துடன் கூடிய வளைவு திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க-17)



## வவுனியாவில் நுளம்பு ஒழிப்பு

வவுனியா, டிசெ. 28

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை வவுனியா நகர்ப் பகுதியில் நேற்று நடைபெற்றது. தங்களுடன் ஒளிப்படக் கலைஞர்கள் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. சிவரஞ்ச்ன் தெரிவித்தார். வவுனியா குடியிருப்பு இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை, குடியிருப்பு கலாசார மண்டபம், குடியிருப்பு பிள்ளையார் ஆலயம் போன்ற பகுதிகளில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. (து)

## டெங்கு விழிப்புணர்வு

டெங்கு அபாயம்– .டெங்கு காய்ச்சலின் ஆபத்தான நிலைகளை ஆரம்பத்திலேயே கண்டறிவதானது சிகிச்சை அளிப்பதில் மிக முக்கியமாகும். காய்ச்சல் ஏற்பட்டு இரண்டு நாள்களின் பின் செய்யப்படும் குருதிப் பரிசோதனையானது மிகவும் பிரயோசனமானது.

சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை
சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.

# பெருகும் சிறுவர் துஷ்பிரயோகம்: கட்டுப்படுத்த என்ன வழி?



> குடும்பத்தில் தாயோ அல்லது தந்தையோ பிரிந்து வாழுதல், பெறறோரில் ஒருவர் இறக்கும் சந்தர்ப்பத்தில் மற்றவர் மறுமணம் செய்து கொள்ளுதல், குடும்பத்திலுள்ள பெற்றோரில் சிலர் போதைப் பழக்கம் உடையவர்களாக இருத்தல் போன்ற பல்வேறு காரணிகளால் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தபடுகின்றனர்.
> சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களை நோக்கின் சிறுவர்களுக்குத் தமது கருத்துக்களை மற்றவர்களுக்கு கூறுவதற்கும், தனக்குச் சரி என்று நினைப்பதைப் பேசுவதற்கும் சுதந்திரம் உண்டு. அதேவேளை தான் விரும்பிய இடத்தில் கல்வி கற்பதற்கும் அவனுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. தனக்கு வேண்டிய விடயங்களை ஊடகங்களின் வாயிலாகப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உண்டு.

த.கார்த்திகா

ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து அதற்கு 18 வயது பூர்த்தி ஆகும் வரை உள்ள அனைத்து பிள்ளைகளும் சிறுவர் என்பதனுள் அடங்குவர். அவர்கள் பெற்றோரின் அன்பு ஆதரவு என்பவற்றுடன் அவர்களுடன் தங்கி வாழ்பவர்களாக உள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து விடயங்களும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பதனுள் அடங்கும். சிறுவர் துஷ்பிரயோகம் ஆனது பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமை மீறல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு பல்வேறு காரணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பிள்ளைகள் பாதுகாப்பற்ற நிலையில் தனித்து விடப்படல், பெற்றோர் கவனக் குறைவாக பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் கவனக் குறைவாக வளர்தல், பெற்றோர் பிள்ளைகளுக்கு வழங்கும் அளவுக்கு மீறிய சுதந்திரம், குடும்பத்திலுள்ள வறுமை, பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் கல்வி அறிவு குறைவு, பெற்றோர் வேலை நிமித்தம் வெளிநாடு செல்லுதல், குடும்பத்தில் தாயோ அல்லது தந்தையோ பிரிந்து வாழுதல், பெற்றோரில் ஒருவர் இறக்கும் சந்தர்ப்பத்தில் மற்றவர் மறுமணம் செய்து கொள்ளுதல், குடும்பத்திலுள்ள பெற்றோரில் சிலர் போதைப் பழக்கம் உடையவர்களாக இருத்தல் போன்ற பல்வேறு காரணிகளால் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களை நோக்கின் சிறுவர்களுக்கு தமது கருத்துக்களை மற்றவர்களுக்கு கூறுவதற்கும், தனக்குச் சரி என்று நினைப்பதைப் பேசுவதற்கும் சுதந்திரம் உண்டு. அதேவேளை தான் விரும்பிய இடத்தில் கல்வி கற்பதற்கும் அவனுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. தனக்கு வேண்டிய விடயங்களை ஊடகங்களின் வாயிலாகப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உண்டு.

பெற்றோர்களிடமிருந்து அன்பு அரவணைப்பு போசாக்கான உணவு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உண்டு. சிறுவர்களுக்கு நோய் ஏற்படும்போது அவர்களுக்கு வைத்திய வசதி அளிக்கப்படாமல் இருப்பது சிறுவர் உரிமை மீறலாகும்.

அதேவேளை ஓய்வு நேரத்தில் விளையாடுவதைத் தடுப்பதும்கூட சிறுவர் உரிமை மீறலாகும்.

இவ்வாறு இவர்களுடைய உரிமைகள் மீறப்படும் போது துஷ்பிரயோகமாக மாறுகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகத்தால் பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. நோய் ஏற்படுதல், மன அழுத்தம், தவறான முடிவு, சமூகத்தில் மதிப்பு இழக்கப்படல் போன்றன ஏற்படுகின்றன. அதனால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதுடன் எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாக மாறுகின்றது.

இதன் விளைவாக போதைக்கு தூண்டுதல், சமூகவிரோத செயல்களில் ஈடுபடுதல் போன்ற துர்ப்பாக்கிய நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு பல்வேறு முறைகளை கையாள்வதன் மூலம் நல்ல நிலைக்கு அவர்களை மாற்ற முடியும். உதாரணமாக சிறுவர் துஷ்பிரயோகத்தை மேற்கொள்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்திக் கடுமையான தண்டனை வழங்குதல், சிறுவர்களுக்குத் துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

சிறுவர்களை எந்த காரணத்துக்கேனும் வேலைக்கு அமர்த்துவதை தவிர்த்தல், பெற்றோர் பிள்ளைகள் மீது அன்பு ஆதரவுடன் வளர்த்தல், பிள்ளைகள் தனியாக இருப்பதைத் தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

கட்டுரையாளர்:
மூன்றாம் வருடம்.
ஊடக கற்கைகள் துறை.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## பிரிவுபசார விழா



யாழ்ப்பாணம்,டிசெ. 28
யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் இடமாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு அவருக்கு பிரிவு பசார விழா அண்மையில் இடம்பெற்றது.
பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி.தி.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,பெற்றோர் எனப் பலர் கலந்து கொ ண்டனர். (ஐ-104)

## விபத்தில் இளைஞர் காயம்



வவுனியா,டிசெ. 28
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர்காயமடைந்து வவுனியாமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ஓமந்தைப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த கப் ரக வாகனத்துடன் வவுனியாவிலிருந்து ஓமந்தை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே படுகாயமடைந்தார். அவர் பயணித்த மோட்டார்சைக்கிளும் கடுமையாகச் சேதமடைந்தது. வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த-110,104,ரி3)

பௌத்த மயமாக்கலுக்கு வித்திட்ட

# சூத்திரதாரி ஜி.ஜியே!

யாழ்.மாநகர ஈ.பி.டி.பி உறுப்பினர்

யாழ்ப்பாணம், டிசெ. 28

இலங்கையில் பௌத்த மயமாக்கலுக்கு வித்திட்டு தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைப்பதற்குக் காரணமாக இருந்தவர் ஜி.ஜி.பொன்னம்பலம் என்று யாழ்ப்பாண மாநகர சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் இரா.செல்வவடிவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை ஆளுகைப் பரப்புக்குள் இடம்பெறும் பௌத்த மய மாக்கல்தொடர்பானசெயற் பாடுகளைஆராயும்அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வ.பார்த்தீபன், பொலநறுவையில் 1901ஆம் ஆண்டு 28 வீதம் தமிழ் மக்கள் இருந்தனர் என்று குறிப்பிட்டிருந்தார். அது தொடர்பில் கருத்துரைக்கையில் செல்வடிவேல் மேலும் தெரிவித்ததாவது:
பொலநறுவை மாவட்டத்தில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்தனர் என்பது உண்மை. அவ்வாறு வாழ்ந்த தமிழ் மக்கள் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் என்பதே பெரிய உண்மை.
அந்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றக் காரணமாக இருந்தவர் அமைச்சர் ஜி.ஜி.பொன்னம்பலம் தான்.
இதனாலேயே அங்கிருந்த அதிகளவான தமிழ் மக்கள் வெளியேறினர்.
பௌத்த சின்னங்களை அமைப்பது தொடர்பில் பேசுகின்றனர். ஆனால் தமிழ்மன்னர்களின் மூன்று பிரதான சிலைகளை மணிக்கூட்டு கோபுரத்தின் அருகே நிறுவினோம்.
அது தொடர்பில் எவரும் பேசவும். பத்திரிகைகள் செய்திவெளியிடவில்லை. நல்லதை வரவேற்கும் பண்பும் இல்லையா. இவ்வாறான திணிப்புகளை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. என்றார். (த-105)

## பொதுமக்கள் சேவைப் பட்டயம் மறுசீரமைப்பு

மூளாய்,டிசெ.28
கிராம அலுவலர்கள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு வகையான சேவைகள் தொடர்பாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள பொதுமக்கள் சேவைப்பட்டயம் மறுசீரமைக்கப்படவுள்ளது.
அதற்கான நடவடிக்கைகளில் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
தற்போது பாவனையில் உள்ள பொதுமக்கள் சேவைப்பட்டயம் ஒரு தசாப்தகாலத்துக்கு மேற்பட்டது. இது தற்போதைய நாட்டின்சூழலுக்குஏற்றதாகஇல்லையென்ற கருத்துபலமட்டங்களிலும்மேலோங்கியுள்ளது. எனவே அதனை மறு சீரமைக்க வேண்டியது அவசியமாகியுள்ளது.
அதனால் இந்தப் பட்டயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பல்வேறு மட்டங்களிலும் ஆலோசனைகளை அமைச்சு எதிர்பார்க்கிறது இது குறித்து தொடர்புடைய திணைக்க ளங்களுக்கு அமைச்சு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. (க-121)

## பௌத்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கினார் மஹிந்த

வவுனியா,டிசெ.28
அகில இலங்கை பௌத்த மத பாடசாலை (தாம் பாசல) மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில்,வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.புத்தசாசன கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சு, பௌத்தமத அலுவல்கள் திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா பரக்கும்ப மகா வித்தியாலயத்தில் நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பதக்கங்களையும், பரிசில்களையும் வழங்கினார்.
600க்கும் மேற்பட்ட பௌத்த மாணவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் அமைச்சர்களான எஸ்பி.திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வவுனியா , முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர்கள், மாவட்டச் செயலர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், மதகுருமார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-110)



## இணைப்பு வீதிகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28
கொழும்புத்துறை ஹொலன்தோட்டத்தில் மூன்று இணைப்பு வீதிகளின் சீரமைப்பு ப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த வீதிகள் கம்பெரலிய திட்டத்தின் கீழ் சுமார் 24 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்.மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். தற்போது இரண்டாம் குறுக்கு வீதியின் சீரமைப்புப் பணிகள் நிறைவுற்றுள்ளன. முதலாம், மூன்றாம் குறுக்கு வீதிகள் விரைவில் சீரமைப்புச் செய்யப்படும். கிரவல் மண் வீதியாகக் காணப்பட்ட வீதிகள் யாவும் தற்போது தார் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றன. (க-17)

## உள்ளம் விரிவடைய இலக்கியம் படியுங்கள்

ஆயர் ஜெபநேசன் வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.28
உள்ளம் விரிவடைவதற்கு ஒவ்வொருவரும் இலக்கியத்தை முழுமையாகப் படிக்க வேண்டும். மாணவர்களும், மாணவிகளும் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாகக் கற்கின்றனர். பல்கலைக் கழகம் சென்றதும் தமிழ் படிப்பதை முற்றாக நிறுத்தி வேறு பாடத்துக்குச் செல்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும், மாற்றப்படவேண்டும்.
இவ்வாறு முன்னாள் பேராயரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்தார்.
சாவகச்சேரி தமிழ்க் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின் இறுதிநாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
அதில் தலைமையுரை ஆற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நமது சமூகம் தற்போது நோய்வாய்ப்பட்டு இருப்பதற்குக் காரணம், இலக்கியம் படிக்காமல் இருப்பதுவே என்று கூறினால் தவறாகாது.
பரதன் இராமனையே அரசனாக்க வேண்டும் என்று காலில் விழுந்து மன்றாடினான். இன்று நமது சமுதாயத்தில் பலரும் அண்ணன் எப்பொழுது சாவான் திண்ணை எப்பொழுது காலியாகும் என்ற எண்ணத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.
அண்ணன் செங்குட்டுவன் இருக்க தனக்குத்தான் பட்டம் என்று நிமித்திகன் கூறிய ஆருடத்தைப் பொய்யுரையாக்க துறவறம் பூண்டான். இளங்கோ அடிகள். இதனால் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் நமக்குக் கிடைத்தது.
ஒரு காலத்தில் தமிழ் மக்கள் இலக்கியத்தை குறிப்பாக இராமாயணத்தை நன்கு படித்தனர்.
திண்ணைப்பள்ளிக் கூடங்க ளில்கூட இராமாயணம் தக்க ஆசிரியர்களால் போதிக்கப்பட்டுவந்தது.
இராமாயணத்தில் ஆர்வம் எழச் செய்யப் பாடுபட்டவர்கள் அனைவருமே தமிழ்ச் சமுதாயத்தின் நன்றிக்குரியவர்கள்-என்றார். (த-50)

## வேலை தேடும் பட்டதாரிகளுக்கு கலந்துரையாடல்

வவுனியா, டிசெ. 28
வவுனியா மாவட்ட அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்குமான கலந்துரையாடல் எவ். எம். ஈ. ஊடக கல்லூரி , குட்செட்வீதி, வவுனியாவில் நாளை மதியம் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. சகல பட்டதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ந. வினோதன் அழைப்பு விடுத்துள்ளார்.
கடந்த காலங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும், அசாதாரண சூழ்நிலைகளுக்குள்ளும் பல்கலைக்கழகம் சென்று 4 ஆண்டுகால பட்டப்படிப்பை நிறைவு செய்தும் தொழில் இல்லாமல் உள்ளனர்.
தற்போதைய அரசு கடந்த ஜனாதிபதித் தேர்தல்களுக்கு முன்னர் கூறிய வாக்குறுதிகளின்படி 54ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும் உள்வாரி, வெளிவாரி, உயர் தேசிய டிப்ளோமா போன்ற எந்தப் பாகுபாடுகளுமின்றி தகைமைக்கு ஏற்ப எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என்று இந்த அரசு அறிவித்திருந்தது.
எனவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் வாக்குறுதிகளின்படி எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் 54ஆயிரம் வேலைதேடும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கவும், எந்தப் பாகுபாடுமின்றி பட்டதாரிகளை தொழில்களில் துரிதமாக இணைத்துக்கொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறுகிறோம்.
நாளைய கலந்துரையாடலில் பட்டதாரிகள் சகலரும் கலந்துகொள்ளுங்கள் என்று அவர் தெரிவித்தார். (த-110)

# ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கக் கோரி போர்க்கொடி

யாழ்ப்பாணம், டிசெ. 28

**ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வழங்கியே ஆக வேண்டும் அல்லது கற்றல் கற்பித்தல் பணிகள் தடைப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கை முழுவதும் சகல அமைச்சுக்கள் திணைக்களங்களின் இடமாற்றங்களை இடைநிறுத்தும் ஓர் அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் ஆசிரியர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்தக் கூடாது. ஏனெனில் பாடசாலைகளின் கல்வி ஆண்டு ஆரம்பத்திலேயே அவர்களுக்கான நேர அட்டவணை, பாடவிதானம் என்பன தீர்மானிக்க ப்படுகின்றன.

இதனால் ஆசிரியர்களின் இடமாற்றம் ஜனவரி மாதம் இடம்பெற வேண்டும். அதனை மாற்றுவது தவறான காரியம். அதேநேரம் ஆசிரியர்களின் இடமாற்றம் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளின் பிரசன்னத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றது. இந்தநிலையில் அதனை நிறுத்தும் தீர்மானம் தொழிற்சங்கத்துக்கே தெரியாமல் எடுப்பதும் கண்டிக்கத்தக்கது.

இதேநேரம், இடமாற்றத் தீர்மானம் இலங்கை நிர்வாக சேவைக்கு மட்டுமானதாகவே கருதப்பட்டு ஆசிரியர்களின் இடமாற்றத்துக்குத் தடைபோடாமல் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். ஏனெனில், ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு மனோநிலை முக்கியமானது. இவ்வாறு இடைநிறுத்தும் முடிவை மேற்கொண்டால் அது கல்வியில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும்–என்றார். (கு-105)

## விலைக்குக் கட்டுப்பாடு: அரிசிக்குத் தட்டுப்பாடு

### யாழில் நுகர்வோர் அங்கலாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்த நிலையில் குடாநாட்டில் வர்த்தக நிலையங்களில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று கூறப்படுகின்றபோதும், கள்ளச் சந்தையில் போதியளவில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒரு கிலோ அரிசி 98 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனினும், 98 ரூபாவுக்கு அரிசி பெறுவது கடினமானதாகவே காணப்படுகின்றது.

ஒரு சில கடைகளில் 98 ரூபாவுக்குத் தரமற்ற அரிசி விற்பனை செய்யப்படுகின்றது என்று வாடிக்கையாளர் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தரமான அரிசி கள்ளச்சந்தையில் தற்போதும் 120 ரூபாவுக்கே விற்பனைசெய்யப்படுகின்றது. எனினும், வர்த்தகர்கள் அவற்றுக்குச் சிட்டை வழங்குவதில்லை, வழங்க மறுக்கின்றனர். அதேநேரம் அரிசியைக் கொள்வனவுசெய்து பணத்தைச் செலுத்திய பின்னர் சிட்டை கோரினால் வழங்கிய அரிசியைப் பறித்து விட்டு பணத்தை வீசி அரிசி இல்லை என்கின்றனர்

எனவே இதற்குரிய திணைக்களங்கள் குடாநாட்டின் வர்த்தக நிலையங்களில் உண்மையில் அரிசி கையிருப்பில் இல்லையா? அல்லது பதுக்கப்பட்டு விட்டதா என்பதைக் கண்டறியவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு-105)

## சுனாமியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி



கொடிகாமம்,டிசெ.28

சுனாமிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு சாவகச்சேரிப் பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சபை மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது

ஆரம்ப நிகழ்வாக 2004 ஆம் ஆண்டு இதே நாளில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் காவு கொள்ளப்பட்ட மக்களின் ஆத்மா சாந்திக்காக மெழுகுவர்த்தி ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது தவிசாளர்,உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர் இதனைத் தொடர்ந்து சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டது. (ஜ-159)

## தொழிற் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியில் 2020 ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான குறுங்கால 3 மாத அடிப்படை ஆங்கிலக் கற்கை நெறி, பல்திறன் கைப்பணியாளர், இலத்திரனியல் வெல்டிங், பொறியீட்டு சான்றிதழ் போன்ற சான்றிதழ் தர கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.கற்கை நெறிகளை பயில விரும்பும் தகுதியுடையோர் எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னதாக, பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஜனாதிபதித் தேர்தல் கடமைக்கான கொடுப்பனவை ஏன் இழுத்தடிக்கின்றீர்கள்?

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஜனாதிபதித் தேர்தலில் கடமைபுரிந்த அரச அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் கிடைக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. ஒரு மாதம் முடிவடைந்து சில நாள்கள் கடந்துவிட்டன. தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படவில்லை என்று அரச அலுவலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இது தொடர்பாக சில திணைக்களக் கணக்காளர்களிடம் கேட்டபோது, "பொதுவாக அந்தந்தத் திணைக்களங்க ளிலுள்ள நிலுவைப் பணத்திலிருந்து கொடுப்பனவுகள் வழங்கப்படும். தற்போது வருட இறுதி என்பதால் வருடாந்த கணக்கு விவரங்கள் இறுதிசெய்யப்படுகின்றமையால் தேர்தல் கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் திணைக்களத்திலிருந்துதான் தேர்தல் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் எமக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னரே அவை அலுவலர்களுக்கு வழங்கப்படும்." எனத் தெரிவித்தனர்.

"தற்போது தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் சில திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. திறைசேரியின் நிதி விரைவாகக் கிடைக்கும் பட்சத்தில் இந்தமாத இறுதியில் அல்லது அடுத்தமாத ஆரம்பத்தில் ஏனைய திணைக்களங்களுக்கும் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன." என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் உதயனுக்குத் தெரிவித்தார். (கு-104)



நாட்டை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் பசறை நகரில் மதில்களில் இளைஞர்களால் ஓவியங்கள் வரையப்படுகின்ற போது. (எ)

## ஒட்டுசுட்டானில் கழிவுகளை கொட்டினால் சட்டம் பாயும்

### தவிசாளர் எச்சரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 28

ஒட்டுசுட்டான் வீதிகளில் கழிவுப் பொருள்களை வீசுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று புதுக்குடியிருப்புபிரதேசசபைத்தவிசாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒட்டுசுட்டான்பகுதியில்உள்ளவீதியோரங்களில், கழிவுப் பொருள்கள் அதிகமாக வீசப்படுகின்றமையால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள வீதிகளின் ஓரத்தில் வெற்றுப் போத்தல்கள், பேணிகள்போன்றகழிவுப்பொருள்கள் அதிகளவில் வீசப்பட்டு வருகின்றன.

இதனால், அவைசுகாதாரத்துக்கும், மக்களுக்கும்இடையூறுகளைஏற்படுத்துகின்றன. எனவே வீதிகளில் அல்லது ஓரங்களில் இம்மாதிரியான கழிவுகளைக் கொட்டுவோர்இனம்காணப்பட்டால்அவர்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கழிவுகளை ஓரிடத்தில் சேர்த்து வைத்து பிரதேசசபைக்கு அறிவிக்குமிடத்து சபையின் கழிவகற்றல் பிரிவினர் அவற்றை எடுத்துச் சென்று அதற்கான இடத்தில் கொட்டுவார்கள்.

அதனை விடுத்து கண்டகண்ட இடங்களில்கழிவுகளைக்கொட்டக்கூடாது. மீறிக் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எமதுகிராமத்தையும், சுற்றுப்புறச்சூழலையும் சுத்தமாக வைத்திருப்போம் என ஒவ்வொருநபரும்நினைவிற்கொள்ளவேண்டும் என்றார். (ஜ-500)



# இறுதிச் சுற்று

கொழும்பு, டிசெ. 28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் விரைவில் தீர்க்கமான சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க, நாளை நாடு திரும்பவுள்ளார்.

அவர் நாடு திரும்பியகையோடு மேற்படி சந்திப்பு இடம்பெறலாம் என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரே இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர் என்றும் சிறிகொத்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.க. தலைமைப்பதவியில் மாற்றம் அவசியம் என்று சஜித் ஆதரவு அணி உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர். எனினும், ரணிலும் அவரின் சகாக்களும் இதற்கு பச்சைக்கொடி காட்ட மறுப்பு தெரிவித்துள்ளனர்.

கட்சிக்குள் மோதல்கள் வலுக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் பதவிக் காலமும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. புதிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்படும் வரையில் தலைவரின் கையிலேயே அனைத்து அதிகாரங்களும் இருக்கும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ரணில், சஜித் நேருக்கு, நேர் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளமையானது முக்கிய நிகழ்வாக ஐ.தே.க. தரப்பில் பார்க்கப்படுகின்றது.

இச்சந்திப்பின்போது ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்காவிட்டால் சஜித் அணி மாற்று நடவடிக்கையில் இறங்கக்கூடும் என்றும், ஜனவரி 2ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் சிறிகொத்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி வழங்கப்படாவிட்டால் பொதுத்தேர்தலின்போது பிரதமர் வேட்பாளர் பதவியை ஏற்கப்போவதில்லை என்று சஜித் பிரேமதாச திட்டவட்டமாக அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.44)

## ரூ.20 லட்சத்தில் சீரமைத்த ஒலுமடு உப அலுவலக கட்டடம் நேற்றுத் திறப்பு



முல்லைத்தீவு, டிசெ. 28

20 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒலுமடு உப அலுவலகக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்ட நிதியில் இது சீரமைக்கப்பட்டது.

சபைத் தவிசாளர் செ.பிரேமகாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசாவும் சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலர் ச.கிரிசாந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அலுவலர்கள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஒலுமடு சூலவைரவர் ஆலயத்தில் இருந்து சுவாமிப் படங்கள் எடுத்துவரப்பட்டு சீரமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா நாடா வெட்டி கட்டடத்தைத் திறந்துவைத்தார். தொடர்ந்து சமய வழிபாடுகள் நடைபெற்றன. புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (த-ரி3)

## 'ஸ்மாட்' நூலகம் திறப்பு

பருத்தித்துறை இன்பர்சிட்டி சனசமூக நிலையம் போரூட் கட்டடத்தில், நவீன மயப்படுத்தப்பட்ட இன்பர்சிட்டி பொது நூலகம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நூல் நிலையத்தைத் திறந்து வைப்பார். (க-173)



விது நம்பிக்கை நிதியத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு மாவிட்டபுரம் நல்லிணக்கபுரம் பொது மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஐ)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, டிசெ.28

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சபைத் தலைவர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடை பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் சபையின் கீழ் உள்ள புலோலி உப அலுவலகம், குடத்தனை உப அலுவலகம், செம்பியன்பற்று உப அலுவலகம் ஆகியவற்றின் எல்லைகளுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். (க-173)

## சைவத்தையும் தமிழையும் பாதுகாப்பது எமது கடமை

### சின்மயா மிஷன் சுவாமி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

சைவத்தையும் தமிழையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். இவ்வாறு வணக்கத்துக்குரிய சின்மயா மிஷன் ஜக்ரத சைத்தன்ய சுவாமி தெரிவித்தார்.

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத்தில் அகத்தியர் குருபூசையும், அறநெறிப்பள்ளி ஆரம்ப நிகழ்வும் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

நிகழ்வுகளில் கலந்தகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கொடிய போரில் இருந்து மீண்டுவரும் நாம் அனைவரும் சைவத்தையும் தமிழையும் காப்பதற்கு முன்வரவேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.



அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் இலங்கை பணிப்பாளர் சதாசிவம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முதல் நிகழ்வாக அகத்திய மாமுனிவரின் குருபூசை இடம் பெற்றது.

பூசையைத் திருமலை தென்கயிலை ஆதீன குரு திருமூலர் தம்பிரான் அடிகளார் நிகழ்த்தினார்.

இதில் மங்கள விளக்குகளை பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட சின்மயா மிஷன் சுவாமிகள், திருகோணமலை தென் கயிலை ஆதீன குரு முதல்வர் அகத்தி அடிகளார் மற்றும் அவரது சீடர் திருமூலர் தம்பிரான் அடிகளார் உட்பட பலரும் ஏற்றிவைத்தனர். (ஐ-160)

# அரிசி ஆலைகளை ஆரம்பிக்க முடிவு

## அரசு அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 28

அடுத்த ஆண்டு தொடக்கம் அரிசி ஆலைகளை ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. மிகவும் குறைந்த விலையில் மக்களுக்கு அரிசியைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கையெடுக்கப்படும். ஜனாதிபதி தலைமையில் இதற்கான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக பெரும்போகத்திலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கையெடுக்கும். அதேபோல் அரிசி ஆலைகளையும் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம். இது தொடர்பான கலந்துரையாடல்களும் ஜனாதிபதி தலைமையில் நடத்தப்பட்டு வருகின்றன.

அரிசியின் விலையைத் தீர்மானிக்கும் சந்தையானது எதேச்சாதிகரமானதாக அல்லது தனிநபர்கள் தீர்மானிப்பவையாகவுள்ளது. அரிசியின் விலையும் அதிகமாகக் காணப்படுகிறது.

அடுத்தவருடம் முதல் அரிசி ஆலைகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். சதொச மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஊடாக குறைந்த விலையில் அரிசியை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவும் தீர்மானித்துள்ளோம். அரிசி விலையை மேலும் குறைப்பது தொடர்பில் அடுத்துவரும் அமைச்சரவைக் கூட்டங்களிலும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

அரிசிக்கான விலை குறைக்கப்பட வேண்டுமென பெரும்பாலான மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுக்கின்றனர். இது மக்களுக்குச் சுமை என்று எமக்கும் தெரியும். 98 ரூபாவும் அதிகமாகும். அதனைவிடவும் குறைவாக அரிசியை விற்பனை செய்ய முடியும். அரசு இந்த விடயத்தில் நடுநிலைமை வகித்து மக்களுக்கு குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக்கொடுக்கும்.

மூன்று கிலோ நெல்லானது இரண்டு கிலோ அரிசியாக மாறும். அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒரு கிலோ நெல்லை 35 அல்லது 40 ரூபாவுக்குத் தான் கொள்வனவு செய்கின்றனர். மூன்று கிலோ நெல்லுக்கு 120 ரூபாதான் செலவாகிறது. அதில் இரண்டு கிலோ அரிசியைப் பெற முடியும். 60, 70 ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசியைப் விற்பனை செய்ய முடியும். ஆனால், வெட்கமில்லாது மக்களிடம் கொள்ளையடிக்கின்றனர். இது தொடர்பில் நான் கவலையடைகிறேன், - என்றார். (ஓ.5,24)



## காளான்போல் முளைப்பர் கவனமாக இருங்கள்

### சாந்தி எம்.பி. தெரிவிக்கிறார்

தலைமன்னார், டிசெ. 28

உங்கள் கஷ்ட துன்பங்களில் பங்கெடுக்காத அரசியல்வாதிகள் இன்னும் ஓரிரு மாதங்களின் பின்னர் இளையோரைக் கூலிக்கு அமர்த்திமழைக்கு முளைத்த காளான்போல் முளைத்தெழுவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

மன்னார் பேசாலை வசந்தபுரம் மக்களின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அவர் தனது வயலில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசிப் பொதிகளையும் மக்களுக்கு வழங்கினார். அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் உங்களுக்கு மற்றவர்களைப்போல் பொய் சொல்லிவிட்டுப் போகமாட்டேன். ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னரிடம் அபிவிருத்திக்கென எந்தவித நிதியும் கிடையாது. எனது விசேட நிதியில் மலசலகூடம், மின்சாரம், பொது மண்டபம் போன்றனவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளேன்.

மழையில்முளைத்தகாளான் போல் இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் வரும் தேர்தலின்போது பலர் உங்கள் முன்னிலையில் முளைத்தெழுவர்.

இளையோருக்கு பணத்தைக் காட்டி பல ஆசை வார்த்தைகள் கூறி இவர்களைக் கூலிக்கு அமர்த்தி நாடாளுமன்றக் கதிரையை அலங்கரிப்பர்-என்றார். (து-60)

## இலங்கை வருகின்றார் ரஷ்ய அமைச்சர் செர்ஜி



கொழும்பு, டிசெ.28

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 14, 15ஆம் திகதிகளில் இந்தப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மரியா ஸகரோவா தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது அவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தற்போதைய உறவுகள், அரசியல் உரையாடலை ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகள், வர்த்தக பொருளாதார, மனிதாபிமான மற்றும் பிற துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

இரு தரப்பு ஒப்பந்தம் மற்றும் சட்ட அடிப்படையை விரிவாக்குவது குறித்துக் கவனம் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கூறினார். (எ)

## தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்

முல்லைத்தீவு,டிசெ.28

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் என்.வி.கியூ மட்டத்திலான முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது. தற்போது பல்வேறு கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு பதிவுகளும் நடைபெற்றுவருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர்,வீட்டு மின்னிணைப்பாளர் தையல், வெதுப்புநர், அழகுக் கலையும் சிகை அலங்கார மும், அலுமினியம் பொருத்துநர்,கணினி வன்பொருள் திருத்துநர்,நீர்க்குழாய் பொருத்துநர்,மோட்டார் வாகனம்' திருத்துநர் மற்றும் இணையத்தள வடிவமைப்பாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான்,பாலிநகர் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன. இந்தக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். கற்கை நெறிகளைக் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழிற்பயிற்சி நிலையம்,பாலிநகர் வவுனிக்குளம் அல்லது ஒட்டுசுட்டான் தொழிற்பயிற்சி நிலையம் 14 ஆம் கட்டை, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரிகளில் எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## 71 குடும்பங்களுக்கு 710 கிலோ அரிசி

முல்லைத்தீவு,டிசெ.28

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால், முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம் பெறுவோம் செயற்றிட்டத்தின் 32 ஆம் கட்டத்தில் 71 குடும்பங்களுக்கு அரிசிப்பொதி வழங்கப்பட்டது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்புடன் 71 குடும்பங்களுக்கு 710 கிலோ கிராம் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தில் இதுவரை 1200 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன என்று துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். (க-246)

## சிறு குடிசைகளில் 28 குடும்பங்கள்

நவாலி,டிசெ.28

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்கு ஊட்டுக்குழியில் 28 குடும்பங்கள் வீட்டுத் திட்டம் இன்றி கொட்டில்கள், சிறு குடிசைகளிலும் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு வீடின்றி வாழ்ந்து வரும் சகல குடும்பங்களும் நிரந்தர உறுதிகளையும், அதற்கான நில அளவை வரைபடங்களையும் வைத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நவாலி வடக்கு ஊட்டுக்குழி பெத்தனாச்சி அம்மன் வீதியில் 4 குடும்பங்களும், இடிகுண்டு வீதி வழியாக நவாலி வடக்கு வரும் ஊட்டுக் குழியில் வீதியில் உள்ள 24 குடும்பங்களுமாக 28 குடும்பங்கள் வீடின்றி, மலசல கூடமின்றி மிகப் பெரும் அவலங்களுடன் பல ஆண்டுகாலமாகக் குடிசை வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றன.

வீடின்றி வாழும் தமது நிலைமைகளை வலி. தென்மேற்குப்பிரதேசசெயலகம் அறியுமா என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-50)

# பூநகரியில் டெங்கு தொற்று

வலி.தென்மேற்கு.டிசெ.28

பூநகரி பிரதேசத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை அடுத்து, தடுப்பு நடவடிக்கையில் சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர்.

டெங்கு கட்டுப்பாட்டிலிருந்த இந்தப் பிரதேசத்தில் வெளி மாவட்டங்களில் இருந்து பூநகரி பிரதேசத்துக்கு வந்தவர்கள் மூலம் தொற்றுப் பரவியுள்ளதாக மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

இந்த வருடத்தில் 44 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 16 பேருக்கும், டிசெம்பர் மாதம் 12 பேருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

அதேவேளை வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சுகாதாரப் பிரிவினர், நுளம்புக் குடம்பி கள்காணப்பட்ட 18 வீட்டு உரிமையாளர்களுக்குச் சிவப்பு அறிவித்தல் வழங்கியதுடன், புகை விசிறும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

முதல் கட்டமாக நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வாடியடிச் சந்தியில் ஒல்லாந்தர் கோட்டைக்கு அருகில் டெங்கு நோய் சம்பந்தமான கூட்டம் இடம்பெறும். (க-115)

# அடக்குமுறைகளால் வீழ்ந்துவிட மாட்டோம்

## அகிலவிராஜ் ஆவேசம்



கொழும்பு, டிசெ.28

அரசை விமர்சிக்கின்ற அரசியல்வாதிகளை அடக்குமுறைக்கு உட்படுத்தும் செயற்பாடுகளை அரசு ஆரம்பித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக மக்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இத்தகைய அடக்குமுறைகளால் ஒருபோதும் எதிர்க்கட்சியை வீழ்த்திவிட முடியாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது: நாட்டில் நிலவிய வெள்ளை வான் கலாசாரம் தொடர்பில் மக்களுக்கு நன்கு தெரியும். அதனால் காணாமல் போன சில நபர்கள் தொடர்பில் தற்போதுவரை எவ்வித தகவல்களும் இல்லாத நிலையே இருக்கிறது. அவ்வாறிருக்கையிலேயே தேர்தல் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்பாளரை சந்திப்பதற்கு வந்த இருவரும் தாம் வெள்ளை வான் கடத்தல் விவகாரங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும், இது குறித்து வெளிப்படுத்துவதற்கு ராஜித சேனாரத்னவைச் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறும் கோரியிருக்கின்றனர். அதன்படியே அந்த விவகாரம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அரசமைப்பின்படி நாட்டுமக்கள் அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. அதேபோன்று நாட்டின் நன்மைகருதி இந்த விடயம் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை அந்த இருவருக்கும் ராஜித சேனாரத்ன ஏற்படுத்திக்கொடுத்தார்.

நாட்டுமக்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்தும் நோக்கிலேயே அதனைச் செய்தார். ஆனால் அவற்றை மனதிலிருத்திக் கொண்டு தற்போது பழிவாங்கல் செயற்பாடுகளை முன்னெடுப்ப தென்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

சம்பிக்க ரணவக்கவுக்கும் இத்தகைய நடவடிக்கையொன்றே எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (எ)

# சட்ட மாற்றங்கள் பற்றி சாரா -நிமல் ஆராய்வு

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் நீதித்துறை, மனித உரிமைகள் மற்றும் சட்டச் சீர்திருத்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இடையே நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று நடந்துள்ளது. மனித உரிமைகள் மற்றும் சட்டத் திருத்த அமைச்சில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

சட்டத்துறையில் புதிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர் திருத்தங்கள் மற்றும் சிறைத்துறையில் முன்னெடுக்கப்படுகின்ற சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைச்சர் தூதுவருக்குத் தெளிவுபடுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறைசீர்திருத்தங்கள்மற்றும்புதியசட்டத்தைஉருவாக் கும் விடயங்களில் ஆலோசனைகளை வழங்க பிரிட்டன் அரசு தயாராக இருக்கின்றது என்றும் புதிய அர சால் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப் பணிகளுக்குத் தூதுவர் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார். (எ)

# விளக்கமறியல்

சாவகச்சேரி.டிசெ.28

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இருவரையும் ஜனவரி 7 அம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

# தாரைக் காணாத மணல் வீதிகள்

நவாலி.டிசெ.28

நவாலி வடக்குப் பெத்தனாச்சி அம்மன் ஆலயத்தில் இருந்து ஊட்டுக்குழி முகப்பு வரை செல்லும் மண் வீதி இதுவரை தாரைக் காணாத வீதியாக உள்ளது.

இந்த வீதியில் சுமார் 15 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேர் மழைக்காலத்தில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் பெரும் அவலத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த வீதி தொடர்பான விவரம் இதுவரை உள்ளூராட்சி பதிவேட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. இந்த வீதி விவரத்தை உள்ளூராட்சி சபை முன்னுரிமைப்படுத்தவில்லை என்று பெத்தனாச்சி அம்மன் ஊட்டுக்குழி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை 20 வருடங்களுக்கு மேல் பொதுப்பாதையாக இருந்த பெத்தனாச்சி ஊட்டுக்குழி வீதியை தனிநபர் தனது வளவு என்று அடைத்துள்ளார். எனவே நீண்டகாலமாக பாவித்த பொது ஒழுங்கையை மக்கள் பங்கேற்புடன் வேலியை பிரித்து பாதையை வழங்க உள்ளூராட்சி சபை முன்வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று இடிகுண்டு வீதியால் இன்னுமொரு நவாலி வடக்கு ஊட்டுக்குழியை நோக்கி வரும் 300 மீற்றர் நீளமான வீதியும் இதுவரை தாரையே காணாத வீதியாக உள்ளது.

நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஊட்டுக்குழி வீதி (180 மீற்றர்), நவாலி வடக்கு ஊட்டுக்குழி வீதி (இடிகுண்டு இணைப்பு வீதி) (300 மீற்றர்) ஆகியன போக்குவரத்துச் செய்ய முடியாத அழிவடைந்துள்ள வீதிகளாகும்.

இந்த வீதிகளை முதலில் வீதி வலையமைப்பில் உள்வாங்கி, வர்த்தமானியில் பிரசுரித்துப் பெயர்ப்பலகையிட்டு, புதிய வீதியாகப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-50)

# சொன்னதைச் செய்தவர்!

## சரவணபவன் எம்.பிக்கு காரை. உறுப்பினர் பாராட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 28

2015 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல மில்லியன் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அபிவிருத்திக்காக அள்ளிவழங்கி, தமது வாக்குறுதி களைச் செயல்வடிவில் நிறைவேற்றிப் பெரும்பணி செய்கிறார் என்று, காரைநகர் பிரதேசசபை உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ஆண்டிஐயா விஜயராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரைநகர் பிரதேச செயலர் பிரிவை உள்ளடக்கிய அலுவலகம் கடந்த 22ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

அதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அவருடைய பாரியாரும் உதயன் நிர்வாக இயக்குநருமான திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் இணைந்து புதிய காரியாலயத்தைத் திறந்துவைத்தனர்.

இதில் சிறப்பு விருந்தினர் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காரைநகர் 9 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக 2015 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல மில்லியன் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வழங்கியுள்ளார்.

இதைவிட 49 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பையும் 9 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகளையும், காரைநகரில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் ஒரு லட்சம் ரூபா நிதியையும் பெற்றுக்கொடுத்த உன்னத மக்கள் சேவையாளனாக சரவணபவனைப் பார்க்கிறோம்.

இதனைவிட அழிவடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாதிருந்த பல வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து சீரமைத்துள்ளார். அவரைக் காரைநகர் மண் மறக்காது. மக்களும் மறக்க மாட்டார்கள்-என்றார். (த-50)

# அலைபேசிகள் கண்டெடுப்பு

சாவகச்சேரி,டிசெ.28

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு அலைபேசிகள் மருத்துவமனை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிளினிக் கூடத்திலும், வெளி நோயாளர் பிரிவிலும் இருந்து மருத்துவமனைப் பணியாளர்களால் கண்டெடுக்கப்பட்டு நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தவறவிட்டவர்கள் உரிய ஆதாரத்தைசமர்ப்பித்துஅலைபேசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)





# கருத்துச் சுதந்திரத்தை அடக்குவதற்கு முயற்சி

## கொதிக்கிறார் அஜித்



**கொழும்பு, டிசெ.28**

**அரசியல்வாதியொருவர் ஊடகவியலாளர் சந்திப்பில் அல்லது மேடையொன்றில் கூறுகின்ற விடயங்களின் உண்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதென்றால், இந்த நாட்டிலுள்ள அனைத்து அரசியல்வாதிகள் மீதும் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.**

தேர்தல் காலத்தில் 'மிலேனியம்' சவால்கள் உடன்படிக்கை தொடர்பாகப் பொய்யான கருத்துக்களை வெளியிட்ட உதய கம்மன்பில, விமல் வீரவன்ச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மீதும் வழக்குத்தொடுக்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசு பதவியேற்றுக் கொண்டதிலிருந்து அவர்களுக்கு எதிராகக் கருத்து வெளியிடுபவர்களை அடக்கும் முயற்சியை ஆரம்பித்திருக்கிறது. அதனாலேயே ராஜித சேனாரத்ன மீது சட்டத்தில் இல்லாததொரு குற்றத்தைச் சுமத்தி அவரைக் கைதுசெய்ய முயற்சிக்கிறது.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தவறான தகவல்களை வெளியிட்டார் என்றுகூறி கைது செய்வதற்கான எந்த வொரு நியதியும் குற்றவியல் சட்டத்தில் இல்லை.

அரசியல்வாதியொருவர் ஊடகவியலாளர் சந்திப்பில் அல்லது மேடையொன்றில் கூறுகின்ற விடயங்களின் உண்மைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதென்றால், இந்த நாட்டிலுள்ள அனைத்து அரசியல்வாதிகள் மீதும் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

வெள்ளை வான் கலாசாரமொன்று நாட்டில் இருந்தது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். அது புதிதாக உருவாக்கப்பட்டதொன்றல்ல. எனவே நாம் வெள்ளை வான் கடத்தல்களுடன் தொடர்புபட்டிருக்கிறோம் என்று எவரேனும் கூறினால் அது குறித்து ஆச்சரியப் படத் தேவையில்லை. ஆனால் அத்த கையதொரு விடயத்துக்கே ராஜித சேனாரத்னவைக் கைது செய்ய முயற்சிக்கிறார்கள்.

தகவலொன்றின் உண்மைத்தன்மையின் அடிப்படையில் வழக்குத் தொடுப்பதெனின், தேர்தல் காலத்தில் மிலேனியம் சவால் உடன்படிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட உதயகம்மன்பில, விமல் வீரவன்ச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மீதும் வழக்குத் தொடுக்க வேண்டும்- என்றார். (ஏ)

# பஸ் கட்டணம் உயராது

கொழும்பு, டிசெ. 28

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் வரை பஸ் கட்டணங்களை அதிகரிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளதாக பொதுஜன தனியார் பஸ் தொழில் முயற்சியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கைக்கமைய இம்மாதம் முதல் 6 சதவீத பஸ்கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் அரசு அண்மையில் வழங்கிய வரிச்சலுகைகள் காரணமாகவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டை கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் தனியார் பஸ் துறையை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாலும் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளாதிருக்க முடிவு செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (ஒ.5.24)

## இடமாற்றம் பிற்போடல்

மூளாய், டிசெ.28

இணைந்த சேவைகள் என்ற பகுதிக்குள் உள்ளடக்கப்படும் அரச அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. அரச அலுவலர்களுக்கு புதிய ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதிக்குப் பிற்போடப் பட்டுள்ளது. (க-121)

# புத்தர் சிலை உடைப்பு: கைதானோரின் மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.28

கண்டி - மாவனெல்ல மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் புத்தர் சிலைகளை உடைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 29 பேரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாவனெல்லை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதிதிகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிதவான் உத்தரவிட்டுள்ளார். கடந்த வருடம் கண்டி, மாவனெல்லை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள புத்தர் சிலைகள் இனந்தெரியாதோரால் உடைத்து சேதமாக்கப்பட்டிருந்தன. (ஏ)

# துப்பாக்கி பறிப்பு; இருவருக்கும் மறியல்

வவுனியா, டிசெ. 28

வவுனியா, போகஸ்வெவ இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாயைத் தாக்கி அவருடைய துப்பாக்கியை பறித்துச் சென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் வவுனியா நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த25ஆம் திகதி அதிகாலையில் தாக்குதல் நடத்தி துப்பாக்கி பறித்துச்செல்லப் பட்டிருந்தது. இராணுவப் பொலிஸார் விசாரணை நடத்தி துப்பாக்கியை மீட்டதோடு சந்தேகநபர் ஒருவரை கைது செய்துசெய்திருந்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் மற்றொருவரும் கைது செய்யப்பட்டிருந்தார். விசாரணைகளின் பின்னர் இருவரும் வவுனியா நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (த-110)

# 'அந்த நிமிடம்' குறும்படம் வெளியீடு






முல்லைத்தீவு, டிசெ.28

தற்காலத்தில் அதிகமாக இடம் பெறும்வீதிவிபத்துக்களின்ரணங்களையும், அவற்றை தவிர்ப்பதற்கானவழிமுறைகளையும் கூறும் 'அந்த நிமிடம்' என்ற குறும்படம் வெளியிடப்பட்டது.

இந்த வெளியீட்டு நிகழ்வு முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனையில் நேற்றமுன்தினம் இடம்பெற்றது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இரத்தினராசா மயூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் குறும்படம் திரையிடப்பட்டதுடன், அந்தக் குறும்படம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களும் கலந்துகொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து குறும் படத்தின், பிரதிகள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. குறும்படத்தின் முதல் பிரதியை இயக்குநர் அபிஷேகனிடமிருந்து, நிகழ்வின் முதன்மை விருந்தினர் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் பெற்றுக்கொண்டார். மேலும் நிகழ்வில் விருந்தினர்களாக கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் சின்னராசா லோகேஸ்வரன் மற்றும் இரட்ணசிங்கம் கவாஸ்கர், முல்லைத்தீவு மவட்ட கால்நடை வைத்திய அதிகாரி இரத்தினசபாபதி, முல்லைத்தீவு மாவட்ட செலான் மற்றும் கிராமிய வங்கிகளின் முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-246)

# அமர்வு நிறுத்தம்

அச்சுவேலி, டிசெ. 28

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையின் அமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது. வருட இறுதி அறிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டி இருப்பதால் அமர்வு இடம்பெறாது. வழமைபோன்று அமர்வு ஜனவரி 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.கிருஷ்ண பிள்ளை அறிவித்துள்ளார். (க-11)

# சிங்களத்தில் மட்டும் என்று இன்னும் முடிவாகவில்லை!

## சமாளிக்கின்றார் டலஸ்



கொழும்பு, டிசெ.28

73 ஆவது சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதத்தை இசைப்பதற்கும் தமிழ் மொழியைப் புறக்கணிப்பதற்கும் அரசு இதுவரையில் எந்தவித உத்தியோகபூர்வத் தீர்மானங்களையும் எடுக்கவில்லை. அரசு அனைத்துச்செயற்பாடுகளிலும் அனைத்து இன மக்களையும் இணைந்தே பயணிக்கும். இவ்வாறு கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடக்கவுள்ள சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பது புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும், அதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள மாறுபட்ட கருத்துக்களும் கவனத்துக்குரியது. இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தலை ஏற்படுத்துவது அவசியமாகும்.

சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும்.

இந்த விடயம் தொடர்பாக அரசு இதுவரையில் எந்தவிதமான உத்தியோகபூர்வ தீர்மானங்களையும் எடுக்கவில்லை. தேசிய நல்லிணக்கத்துக்கு மொழிகளின் முக்கியத்துவம் இன்றியமையாததாகும்.

போர் முடிந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டில் அனைத்துப்பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக முறையான அந்தஸ்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் அரசியல் ரீதியில் ஒருமித்த தீர்மானத்தை எடுத்தார்கள் என்றும் குறிப்பிட முடியாது. ஜனநாயக ரீதியில் தேர்தல் நடந்தது.

நாட்டில் இரண்டு மொழிகள் வழக்கத்தில் உள்ளன. இரண்டு இனத்தவர்களும் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தல் அவசியமாகும். இல்லாத ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் வன்மத்தைத் தூண்டும் செயற்பாடுகளே நடக்கின்றன.

அரசு எந்த நிலையிலும் இனங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை வழங்காது. தகுதி மற்றும் திறமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனைத்துச் செயற்பாடுகளிலும் தமிழ் மக்களை இணைத்துக் கொண்டே பயணிப்போம். - என்றார். (எ)

## மாணவர்களுக்கு நிதி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 28

யாழ்ப்பாணம் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 2020 இல் தரம் ஒன்றில் கற்பதற்குப் புதிதாக இணையும் மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

குப்பிளானைச் சேர்ந்த சுவிஸ்நாட்டில் வசிக்கும் நலன் விரும்பி தி.பஞ்சாட்சரலிங்கம் இந்த உதவியை அண்மையில் வழங்கியுள்ளார்.

அவர் மாணவர் ஒருவருக்கு ரூ. 5 ஆயிரம் வீதம் 20 மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவை வங்கியில் வைப்புச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-104)

## சிறுவர் மகிழ்களம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

கொக்குவில் சனசமூக நிலையம் நடத்தும் சிறுவர் மகிழ்களம் நிகழ்வும், 2020 ஆண்டு புதுவருட வரவேற்றல் நிகழ்வும் சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

சனசமூக நிலையத்தலைவர் இ.செல்வராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி அ.ஜெயக்குமரன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹேமா சிவசோதி, நல்லூர் பிரதேச சபை உப தவிசாளர் இ.ஜெயகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

## 4 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

நவாலி,டிசெ.28

நவாலி வடக்கு பெத்தளாச்சி அம்மன் வீதியில் இணைந்த ஊட்டுக்குழியைச் சேர்ந்த 4 குடும்பங்கள் கடந்த பெரு மழையால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஊட்டுக்குழி வீதியைச் சேர்ந்த 13 குடும்பங்கள் பெருவெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளனர்.

இந்தக் குடும்பங்களுக்குத் தொண்டு நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் கோரிக்கை முன்வைத்துள்ளது. (க-50)

## லொத்தர் சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, டிசெ.28

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பரிந்துரையின் கீழ் அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவராக டபிள்யூ. நாலினி அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

டபிள்யூ.நாலினி அபேவர்தன இலங்கை வங்கியின்பொதுமுகாமையாளராகவும், தேசிய சேமிப்பு வங்கியின் முதல் பெண் தலைவராகவும் பணியாற்றியிருந்தார். (எ)

## சிரமதானம்

கொடிகாமம்,டிசெ.28

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியிலிருந்து 11 மணிவரை சிரமதானப்பணி இடம் பெறவுள்ளது

அடுத்த ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 2 அம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. மாணவர்களை டெங்கு நோயிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் பாடசாலை வளாகப் பகுதிகள் சுத்தம் செய்யப் படவுள்ளன. பாட சாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் அனைத் துப் பெற்றோர்களையும் இந்த சிரமதானத்தில் இணைந்து கொள்ளுமாறு அதிபர் பொ.நடேசலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ-159)

## வீதிவிபத்தில் இருவர்காயம்

சாவகச்சேரி,டிசெ.28

நாயுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நாவற்குழியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்குச் சென்றவேளையில் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி கச்சாய் வீதி மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களைச் சேர்ந்த 20 வயது இளைஞர்கள் இருவர் காயமடைந்தனர். (ஜ-9)





## எம்.ஜி.ஆரின் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம். ஜி. ஆரின் 32 ஆவது நினைவு தின நிகழ்வுகள் பண்டத்தரிப்பு விநாயகர் கலையரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

பண்டத்தரிப்பு சாந்தை எம்.ஜி.ஆர் முன்னேற்ற விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் 2019 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் இடம் பெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடம் பெற்ற இந்திரசிட்டு தமிழரசி, ஜே.148 கிராம அலுவலகராகக் கடமையாற்றி மாற்றலாகிச் சென்ற சுதர்சன் மற்றும் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 மாணவர்கள் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண எம்.ஜி.ஆர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் செல்வகுமார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-23)

# தவறான அழைப்புகளால் நிதி மோசடி




## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.28

**தெரியாத சர்வதேச தொலைபேசி இலக்கங்களில் இருந்துவரும் (மிஸ்ட் கோல்) தவறுதலான அழைப்புக்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவ்வாறான அழைப்புகள் தொடர்பில் தமக்கு அறிவிக்க வேண்டும் என்றும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இனம்தெரியாத வெளிநாட்டு இலக்கங்களில் இருந்து அழைப்புக்கள் வந்தால் குறித்த இலக்கங்களுக்கு மறுபடியும் அழைப்பு ஏற்படுத்த வேண்டாம் எனத் தெரிவித்திருக்கும் தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு, இதுபோன்ற அழைப்புக்கள் வந்தால் குறித்த இலக்கங்களை உடனடியாக 1700 என்ற இலக்கத்தினூடாக குறுச்செய்தி அனுப்பித் தம்மிடம் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்வாறு அழைப்புக்களை மேற்கொள்வோர், இலங்கையில் தொலைபேசிகளைப் பயன்படுத்துவோரை இலக்காகக் கொண்டு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக 10235, 646, 2532, 10212, 621001782 இவ்வாறான இலக்கங்களுக்கு பதிலளிக்கும் பொழுது இவர்களது தொலைபேசிக் கணக்குக்குள் பெருந்தொகைப் பணம் தொலைபேசி அழைப்பை மேற்கொள்பவர்களிடம் இருந்து மோசடி செய்யப்படுகின்றது. இவ்வாறான தவறிய அழைப்புக்குப் பதிலளித்த இலங்கையில் தொலைபேசியைப் பயன்படுத்துவோர் இது தொடர்பாக தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்தல் சபையிடம் முறையிட்டுள்ளனர். இது தொடர்பாக ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் 10235, 646, 2532, 10212, 621001782 என்ற இலக்கங்களில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றன. இவ்வாறான தவறிய அழைப்புகள் ஏதேனும் வந்தால் உடனடியாக 1700 என்ற இலக்கத்துக்குக் குறிஞ்செய்திகள் மூலம் தெரியப்படுத்த முடியும் எனத் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (எ)

# ‘லைசென்ஸ்’ பெறுவதை இலகுபடுத்த எஸ்.எம்.எஸ்.

கொழும்பு, டிசெ.28

சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கான வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிய நேரத்தை அறிவிக்கும் குறுஞ் செய்தி முறையை அறிமுகப்படுத்த மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவியுடன் இந்த நடைமுறையானது எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அறிமுகப்படுத்தப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பதில் ஆணையாளர் உபாலி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பிற்பகல் பிற்பகல் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்துக்குச் சொந்தமான வேரஹெர அலுவலகத்திற்குத் திடீர் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

அந்தத் திணைக்களத்திடமிருந்து சேவையைப் பெற்றுக் கொள்ள வரும் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கவனம் செலுத்திய அவர், சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக அரச நிறுவனங்களுக்கு வரும் எந்தவொருவரையும் அசௌகரியத்துக்கு உள்ளாக்காது உடனடியாக சரியான மற்றும் வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது அனைத்து அரச ஊழியர்களினதும் பொறுப்பாகும் என அறிவிறுத்தியிருந்தார். அதையடுத்தே குறுஞ் செய்தி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)


## நீங்காத நினைவுகளுடன் 14ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 23 . 02 . 1951

விண்ணில் 02 . 01 . 2006

### திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி - வளர்பிறை திருதியை (28.12.2019)

அன்பான பேச்சின் உறைவிடமே
அழகான புன்னகையின் சொந்தமே
பண்பாகப் பேசும் பாசமுள்ளவரே
பாசம் நிறைந்த அம்மாவே !
உங்கள் நினைவுகளில் நாம் இங்கே தவித்து நிற்க
நினைவெல்லாம் மறந்து நித்தியமாய் உறங்கியதேன் ?
உங்கள் கண்களில் நாம் கண்ணீரைக் கண்டதில்லை
புன்னகைக்கோ வதனத்தில் குறைவும் இல்லை !
மனதோடு உன்சிரிப்பு இடமின்றி நிறைந்திருக்க
நெஞ்சோடு உம் உருவம் நிழலாக உலாப்போக
கண்ணோடு உங்கள் பிம்பம் கண்ணீராய் உருகுதம்மா
உங்கள் உயிர் பறித்த காலனவன் சதியோ யாமறியோம் !
ஈரேழு ஆண்டுகள் கரைந்தாலும் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்
எம்மனதை கல்லாக்கி
உங்களை நாம் கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

இல.110, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 5037

உங்கள் பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.


## பாதையை சீர்செய்க!

யாழ்ப்பாணம், டிசெ.28

கல்லுண்டாய் வெளியில் அமைக்கப்பட்டுவரும் நூறு வீட்டுத் திட்டத்துக்குரிய பாதையை உடன் சீர்செய்து போக்குவரத்தை இலகுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதை சீரின்மையால் குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள், பாடசாலை மாணவிகள் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தப் பகுதியில் 100 வீடுகள் அமைக்கும் பணி இடம்பெறுகின்றது. ஏற்கனவே குடியமர்த்தப்பட்ட மக்கள் வசித்து வருகின்ற போதும் போக்குவரத்து சீர்செய்யப்படவில்லை.

பாதையில் கருங்கற்கள் கொட்டப்பட்டுள்ளன. எனினும் பாதை சீரமைக்கப்படவில்லை என்று குடியேற்றத்திட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-50)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் நகுலாம்பிகை ஜெகதீசன்



தோற்றம் 04 . 06 . 1942

மறைவு 28 . 11 . 2019

ஐவரைப் பெற்றெடுத்துப் பாசத்துடன் அரவணைத்து
அரும்பாடுபட்டு எம்மை ஆளாக்கி வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை வாழவைத்த அன்புத் தாயே!
நித்தமும் உங்களை நினைத்து நிழல்தேடி அலைகின்றோம்
நிலையில்லா இவ்வுலகை விட்டு நீள்துயில் கொண்ட
உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 05 . 1943

இறப்பு 24 . 12 . 2019

### Kamaladevi Joseph (கமலா)

யாழ்ப்பாணம் ஏழாலை தெற்கை பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த Kamaladevi Joseph (கமலா) அவர்கள் 24.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - தவமணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற Ernest Joseph அவர்களின் அன்பு மனைவியும், Roshan Thakshan Joseph {Director of Nexus Property Developers (Pvt) Ltd} காலஞ்சென்ற Bright Rukshan Joseph ஆகியோரின் பாசமிகு தாயாரும், Jeyamani Thurairatnam, Arasaratnam காலஞ்சென்றவர்களான Jesuratnam, Ratnamalar Ratnarajah ஆகியோரின் அன்புச் சகோதரியும், Anoja Joseph இன் அன்பு மாமியும் Abhijitha Joseph இன் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2019) சனிக்கிழமை ஏழாலை தெற்கு களவாவோடையில் அமைந்துள்ள "நிம்மதி" இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதி ஆராதனை நடைபெற்று ஏழாலை தெற்கில் அமைந்துள்ள CACM சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(cs.30175) (13.17) Roshan Joseph (Son - 0773686130)

# அர்ஜுன் மகேந்திரன் விரைவில் மாட்டுவார்

## சுமதிபாலவின் கணிப்பு



**கொழும்பு, டிசெ.28**

**மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை சில வாரங்களுக்குள் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான இயலுமை காணப்படுகின்றது என்று தொழில் நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரம் உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்குக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டபோது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு நாடு கடத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது. சட்ட நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் உடனடியாக அவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார். பிரதான சந்தேகநபரான அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வரப்படும்வரை பிணை முறிகள் மோசடி தொடர்பான விசாரணைகளுக்குச் சிக்கல் காணப்படும். அர்ஜுன் மகேந்திரன் நாடு திரும்பியதும் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார். அதன்பின்னர் இந்த மோசடியுடன் தொடர்புடைய மேலும் சிலர் தொடர்பாகவும் தெரியவரும் - என்றார். (எ)

# நவாலி வடக்கு பின்னடைவு

நவாலி,டிசெ.28

நவாலி வடக்கு உட்கட்டுமான அபிவிருத்தியில் பின்னோக்கியே உள்ளது. அதிலும் வீதி அபிவிருத்தி முழுமை பெறாது, மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே சப்ரிகம திட்டத்தில் சிறந்த திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, கிடைத்த நிதியை முழுமையாகப் பயன்படுத்துங்கள் என்று நவாலி வடக்கு கிராம அதிகாரி ஜீவா சஜீவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அழகிய கிராமங்களாக வலுவூட்டல் செய்யும் சப்ரிககம அபிவிருத்தித் திட்டக் கூட்டம் நவாலி வடக்கு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் காரியாலயத்தில் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவாலி வடக்கில் புலவர் வீதியுடன் இணைப்பாக உள்ள 8 வீதிகள் மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்த நிலையில் உள்ளன. அதேபோன்று நவாலி வடக்குப் பகுதியில் மட்டும் ஊட்டுகுழி பிரதேசம் உட்பட 24 க்கும் மேற்பட்ட வீதிகள், மதகுகள், வாய்க்கால்கள் புனரமைப்பு செய்ய வேண்டியுள்ளன. இதில் மக்கள் முன்னுரிமையின் பிரகாரம் தெரிவுகள் இடம்பெற்றால் அபிவிருத்திகளை ஒருங்கிணைந்த அடிப்படையில் முன்னெடுக்கலாம்.- என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் அ.திலீபன் தெரிவித்ததாவது:

முதற்கட்டமாக 2 மில்லியன் ரூபா அடுத்துவரும் மூன்று மாத கால அபிவிருத்திக்குரிய நிதியாகும். இந்தத் திட்டம் குறுங்காலத்தில் வெற்றியளித்தால் அடுத்து வரும் காலங்களில் தொடர்ந்து 3 மில்லியன் ரூபா உட்கட்டுமான அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும்.-என்றார்.

இந்த நிகழ்வில் நவாலி வடக்குப் பொருளாதார அபிவிருத்தி அதிகாரி தம்பையா தாமரி தலைமையில், நவாலி வடக்கு பிரதேசத்துக்கான 5 உட்கட்டுமான வீதி அபிவிருத்தி முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டன. (க-50)

# ரயில் சேவைக்கு விசேட செயலணி

கொழும்பு, டிசெ.28

ரயில்வே சேவையை வினைத்திறனுடன் வழங்கும் நோக்கில் அடுத்த ஆண்டு விசேட செயலணியொன்று நிறுவப்படவுள்ளது.

ரயில்வே துறையில் ஏதேனும் மோசடிகள், முறைக்கேடுகள் மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களைக் குறித்த செயலணியுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என ரயில் சேவைகள் இராஜாங்க அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்கண்ட செயலணியுடன் தொடர்புகொள்வதற்கு விசேட தொலைபேசி இலக்கங்களும் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (எ)

## அதிகாரிகளுக்கு இடையூறு

# யாழ்.நகர வர்த்தகருடன் மேலும் இருவர் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்ப்பாணத்தில் அரிசி விலைக் கட்டுப்பாடு தொடர்பில் பரிசீலனைக்காகச் சென்றவரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் வர்த்தக நிலையத்தில் பணியிலிருந்த மூன்று பேரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

யாழ்ப்பாண சத்திரத்துச் சந்திக்கு அருகிலிருந்த ஒரு வர்த்தக நிலையத்தில் அரிசி கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கமைய அதிகாரிகள் அங்கு சோதனையில் ஈடுபட்டனர்.

அங்கு 10கிலோகிராம் அரிசியைக் கொள்வனவு செய்துள்ளனர். 10 கிலோ அரிசி வழங்கிய வர்த்தக நிலையத்தினர் கட்டுப்பாட்டு விலையான 980 ரூபாவுக்குச் சிட்டை வழங்கியுள்ளனர்.

"98 ரூபாதான் அரிசி விற்பனை விலையெனில், ஏன் விற்பனை விலையைக் காட்சிப்படுத்தவில்லை என்று கேட்டபோது இருதரப்பினருக்குமிடையே தர்க்கம் ஏற்பட்டது" என்று விலைக் கட்டுப்பாட்டு அதிகார சபையினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. "தர்க்கம் ஏற்பட்டபோது அதிகாரிகளே தாக்க முற்பட்டனர். அதனால்தான் குழப்பம் ஏற்பட்டது" என்று வர்த்தக நிலையத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரு தரப்புக்குமிடையில் நீண்ட நேரம் ஏற்பட்ட கடும் தர்க்கம் காரணமாக அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று குற்றஞ்சாட்டி அதிகாரிகள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதனால் வர்த்தக நிலையத்தில் நின்ற மூவரையும் பொலிஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்று பின்னர் விடுவித்தனர். (த-105,104)

# சந்தைகளை கண்காணிக்க கமரா

நல்லூர்.டிசெ.28




நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் அடுத்த 2020 ஆம் ஆண்டில் சந்தைகளுக்கு கண்காணிப்பு கமராக்களும் வீதிகளுக்கு குவிவு வில்லைகளும் பொருத்தப்படவுள்ளன.

இந்தக் குவிவு வில்லை மற்றும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்துவதற்கென சுமார் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சபையினர் தெரிவித்தனர்.

2020ஆண்டுக்கான வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு முக்கிய சந்தைகளுக்கு கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. சந்தை வளாகத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள் மற்றும் இதர நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நோக்குடன் சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. அதனைவிட சபைக்கு உட்பட்ட பிரதான விதிகளுக்கு குவிவு வில்லைகளும் பொருத்தப்படும். ஏற்கனவே 2019ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் ஊடாக குறிப்பிட்ட சில வீதிகளுக்கு குவிவு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன. (க-17)



# ஒளிவிழா நிகழ்வு

சாவகச்சேரி,டிசெ.28

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஒளிவிழா நிகழ்வு நேற்று வலய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி ரெக்ஸ் சௌந்தரா அடிகள், தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி ஆலயப் போதகர் அருளாளர் கே.ஏ.செல்வநாயகம் அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அலுவலக பணியாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் இறைபாடல்களும் மதகுருமார்களின் ஆசியுரைகளும் இடம்பெற்றன. (ஜ-9)

# சத்சங்க நிகழ்வு

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை யாழ்ப்பாணம் மருதனார் மடம் வீதி உரும்பிராய்ச் சந்தியிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் "சுயமுற்சியா இறை அருளா" என்ற தலைப்பில் ஆன்மீக உரை இடம்பெறும். (க)





# மண்டலப் பூசை

வவுனியா,டிசெ.28

வவுனியாவில் சபரிவாசன் தீர்த்த யாத்திரைக்குழுவின் ஐயப்ப மண்டலப் பூசை கடந்த திங்கட்கிழமை சிறப்பான முறையில் இடம்பெற்றது.

வவுனியா உக்குளாங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற இந்தப்பூசை நிகழ்வின் போது ஐயப்பனுக்கு சிறப்பு அபிசேக வழிபாடுகள் இடம்பெற்றன.

இம் மண்டல பூசை நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த குருசாமிகள், நூற்றுக்கணக்கான ஐயப்ப சாமிகள், அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி சபரிமலைக்கு சுவாமிமார்கள் செல்ல இருப்பதால் அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு சபரிவாசனுக்குச் சிறப்புப் பூசைசகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-110)





# வசதியற்றவர்களுக்கு கருணை உள்ளம் உதவி

வடமராட்சி, டிசெ.28

கருணை உள்ளம் நிறுவனத்தால் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. நிறுவுநர் ஜனிஸ்ரன் தலைமையில் கருணை உள்ளம் நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நத்தார் பாடல்கள் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற உறவுகளுக்கான உலர் உணவுகள், பாடசாலை மாணவர்களின் கல்விக்கான உதவிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள் என்பன வழங்கப்பட்டன.

நிகழ்வில் நிறுவன உறுப்பினர்கள், நிரந்தர நிறுவன பயனாளிகள் என சுமார் இருநூறு பேர் வரையில் கலந்து கொண்டனர்

வடமராட்சி வடக்கில் உள்ளது கருணை உள்ளம் நிறுவனம், வலிந்து உதவும் நிறுவனம் என்று தெரிவிக்கப்படுகிறது. வசதியற்றவர்களுக்கான உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே நிறுவனத்தின் நோக்கமாகும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அந்த நிறுவனம் இவ்வாறு உதவிகளை வழங்கி வருகிறது. (ஐ-160)





# முருங்கனில் வாராந்த சந்தை

மன்னார்,டிசெ.28

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முருங்கனில் அமைக்கப்பட்ட வாராந்த சந்தைக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கட்டடத்தைத் திறந்து வைத்தார். 20இலட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி. பரஞ்சோதி, நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் நுலக உதவியாளர்கள், மதத் தலைவர்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (க-213)



# மாணவர்களுக்கு உதவி வழங்கல்

வவுனியா,டிசெ.28

வவுனியா கருங்காலிக்குளம் அ.த.க.பாடசாலையில் கல்வி பயிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்களும், ஒரு துவிச்சக்கரவண்டியும் வழங்கப்பட்டன.

லண்டனில் வசிக்கும் ஞானசேகரம் புவி தனது பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவியை அண்மையில் வழங்கியிருந்தார். (ஐ-222)



# மாணவர்கள் மதிப்பளிப்பு

கொடிகாமம்,டிசெ.28

மீசாலை யாழ்ப்பாணம் உமா தவா கல்வி நிலையத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு சாவகச்சேரி சிவன் கோவிலடி கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேசிய நிலையில் 196 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவன் யோ.ஆருஷன் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

மேலும் சித்தி பெற்ற மாணவர்கள் 184 பேரும் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து பெற்றோர்களின் வாழ்த்துரைகள் இடம்பெற்றன. (ஐ-159)

# பரிசளிப்பு நிகழ்வு

வவுனியா,டிசெ.28

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு தேசிய, மாவட்ட மட்ட ரீதியில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி தனுசியா பாலேந்திரன் தலைமையில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சிறீனிவாசனின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.ஹனீபா, மேலதிக மாவட்டச் செயலர் திரேஸ்குமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இதன் போது போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் தானியங்கி மூலமாகக் குருதிப் பரிசோதனை உபகரணத்தைக் கண்டுபிடித்த சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி ரோகிதா புஸ்பதேவனிக்கு 25 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகள், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110)



# மாவீரர் குடும்பத்துக்கு வீடு கட்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் மாவீரர் குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்று கட்டிக் கையளிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை தம்பிரான் தோட்டம் பகுதியில் வசிக்கும் சண்முகம் துரைராசா குடும்பத்துக்கே வீடு கட்டி அண்மையில் கையளிக்கப்பட்டது.

புலம்பெயர் நிதி உதவியின் 'வறுமை ஒழிப்போம் வாழ வைப்போம்' அமைப்பு இதைக் கட்டிக் கொடுத்தது. (த)



# விருது வழங்கல்

புதுக்குடியிருப்பு,டிசெ.28

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறப்பாகச் செயற்பட்டமைக்காகப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் புதுக்குடியிருப்புப் பொது நூலகத்துக்கு விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அமைச்சர் டளஸ் அழகப்பெரும கலந்து கொண்டார். விருதை நூலகரும், நூலக ஊழியரும் பெற்றுக் கொண்டனர். (ஐ-159, 9)






# அதிர்ஷ்டத்தை அள்ள போகும் ராசிக்காரர்கள் யார்?

## மிதுனம்

தன்னிடம் உள்ள திறமைகளைச் சரியான தருணத்தில், சரியாகப் பயன்படுத்தி முன்னேறும் மிதுன ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் புத பகவான் உங்கள் ராசிக்கு 6 ல் சஞ்சரிப்பதால் எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். மற்றவரிடம் விரோதம் பாராட்ட வேண்டாம். கோபத்தைத் தவிருங்கள்.

குடும்பத்தில் அமைதி நிலவும். பொருளாதார நிலை தேவையான அளவு இருக்கும். சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. வெளியூர்ப் பயணங்களில் கவனம் தேவை. தாய் மற்றும் உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வாகனங்களை பழுது பார்க்கும் சூழல் ஏற்படும். குழந்தைகள் உடல்நிலையில் பாதிப்பு வந்து நீங்கும். கணவன் மனைவிக்குள் சிறு, சிறு பிரச்சினைகள் வர வாய்ப்புள்ளதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கூட்டாளிகளால் பிரச்சினை வர வாய்ப்புள்ளதால் கூட்டாளிகளைக் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது.

திருமணத்துக்கு முயற்சிப்பவர்களுக்கு,திருமண முயற்சிகள் கைகூடும். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. தேவையற்ற வெளியூர்ப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. தொழில் மற்றும் உத்தியோகத்தில் இருப்பவர்கள், எந்த விடயத்தையும் கவனமாகக் கையாளுங்கள். அவசரம் வேண்டாம். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

மூத்த சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உங்கள் முயற்சிகள் ஈடேறும். எதிர்பாராத தனவரவும், அதிர்ஷ்டமும் உண்டு. எதிர்பாலினத்தவரிடையே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. இரவு நேர உறக்கத்தைத் தவிர்க்க வேண்டாம். பயணங்களில் உங்கள் உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

அதிர்ஷ்டமான நாட்கள்:
டிசெம்பர் 23, 24, 25.ஜனவரி 1, 2, 3, 4, 5, 6.

## கடகம்

தானுயர்ந்து, தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்தும் கடக ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சந்திர பகவான் உங்கள் ராசிக்கு 2 ல் இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நீண்ட நாளாக வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். எதிரிகளால் பிரச்சினை வந்து நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. உங்களின் எல்லா முயற்சிக்கும் இறையருள் துணை புரியும். தாயின் உடல்நிலை ஆரோக்கியமடையும். தாய் மற்றும் உறவினர்களின் ஆதரவு உண்டு. பூர்வீகச் சொத்து விஷயங்களில் கவனம் தேவை.

குழந்தைகள் உடல்நிலையில் ஏதேனும் பிரச்னை என்றால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது. உத்தியோகத்தில் அலைச்சல் அதிகரிக்கும். பணிச்சுமை அதிகரிப்பதால் சோர்வடைவீர்கள். மாத முற்பகுதியில் கணவன் மனைவிக்குள் சிறு, சிறு பிரச்சினைகள் இருந்தாலும், பிற்பகுதியில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு.புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும்

தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழிலில் உங்கள் திறமை முழுவதும் வெளிப்படும். உங்கள் தனித்திறமையால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

எந்த சூழ்நிலையையும் சமாளித்து, சாதகமாக பயன்படுத்தி வெற்றி பெறுவீர்கள். மற்றவர்களிடையே புகழ், அந்தஸ்து அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். மனைவி வழியில் தனவரவு, சொத்து கிடைக்கும்.

வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. இரவு நேரத் தூக்கத்தைத் தவிர்க்க வேண்டாம். வேற்று மதத்தினர்களால் ஆதாயம் உண்டு. மறைமுக எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள்.

அதிர்ஷ்டமான நாள்கள்:
டிசம்பர் 25, 26, 27 ஜனவரி 4, 5, 6, 7, 8.

# நீங்கள் இதில் எந்த நேரத்தில் பிறந்தவர்கள்?



உங்களது பிறந்த நேரப்படி உங்கள் ஆளுமை எப்படி இருக்கிறது என்று பார்போம்.

**அதிகாலை 4-8**
அதிகாலை 4 மணி முதல் காலை 8 மணி வரை பிறந்தவர்கள் சீரானவர்கள் மற்றும் மிகவும் கடின உழைப்பாளிகள். இவர்களை மற்றவர்கள் ஊக்குவிக்கும் போது சிறந்த முடிவுகளை எடுப்பார்கள்.

**8 மணி - நண்பகல்**
இவர்கள் எப்பொழுதும் நம்பிக்கை உள்ளவர்கள், அனைவரிடமும் இருக்கும் நல்ல குணத்தைப் பார்ப்பார்கள்.
அவர்கள் இயற்கையான தலைவர்கள், ஆனால் சில சமயங்களில் பகல் கனவு காண்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் கனவில் தங்கள் சுயத்தை இழப்பவர்கள்.

**நன்பகல் - 4 மணி**
இவர்கள் ஆற்றலின் வடிவமாக இருப்பார்கள். இயற்கையாகவே அதிக படைப்பாற்றல் கொண்டவர்களாக இருப்பார்கள். அனைவரிடமும் அன்பாக இருக்கும் இவர்கள் எப்பொழுதும் உற்சாகமாகக் காணப்படுவார்கள்.

**4 மணி - 8 மணி**
இவர்கள் சமூகக் கிளர்ச்சியாளர்களாக இருப்பார்கள், மேலும் விதிமுறைகளை பின்பற்றுவதை வெறுப்பார்கள். குறைவான பயணத்தைச் செய்து சிறந்த கலைஞர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களாக உருவாகுவார்கள். இவர்கள் தங்கள் திறனுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை வாழ்வார்கள்.

**8 மணி - நள்ளிரவு**
இவர்கள் தனிமையை விரும்புபவர்களாக இருப்பார்கள், எப்போதும் தங்களின் சுயத்தை இழந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பார்கள். இவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் அதிகமாக இருக்கும், மேலும் இவர்கள் ஆழமான சிந்தனை கொண்டவர்களாக இருப்பார்கள்.

**நள்ளிரவு - அதிகாலை 4**
இவர்கள் அதிக கனவு காண்பவர்களாக இருப்பார்கள் மற்றும் தங்கள் சொந்த உலகத்தில் வாழ்பவர்கள், எனவே இவர்கள் எதார்த்த உலகத்தில் இருந்து எப்போதும் விலகி இருப்பார்கள். இவர்களுக்கு இசை மற்றும் கவிதையில் நல்ல எதிர்காலம் இருக்கும்.



# தமிழ் அரசுக் கட்சி ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 28

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் கிளிநொச்சிக் கூட்டுறவு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ.5)

# ஆற்றுகை அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம் டிசெ.28

ஈழத்தின் தமிழிசை அரங்கேற்று விழாவின் அறிமுக நிகழ்வு நாளை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது. குரலோசை - நுண்கலைகளின் தாயகத்தின் ஏற்பாட்டில் தொல்புரம் சர்வோதயம் மற்றும் கலாலயம் ஆகியவற்றின் அனுசரணையில் தொல்புரம் சர்வோதய நிலையத்தில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது. (104)

## உயிரியல்...

பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்னிரவு வெளியாகியிருந்தாலும் பாடசாலைகளுக்கு முழுமையான பெறுபேறுகள் நேற்று நள்ளிரவு வரையில் கிடைக்கப் பெறவில்லை. இதுவரை கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 10 மாணவர்களுக்கு 3ஏ பெறுபேறு கிடைக்கப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 7 மாணவர்களுக்கு 3ஏ பெறுபேறு கிடைக்கப் பெற்றுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 3 மாணவர்களுக்கு 3ஏ பெறுபேறு கிடைக்கப் பெற்றுள்ளது.

கணிதம், உயிரியல், வர்த்தகம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் யாழ். மாவட்டத்தில் முதலிடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளனர்.

கலைப் பிரிவில், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவி பிராசாந்தினி 3ஏ பெறுபேறு பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். வட இந்துமகளிர் கல்லூரி மாணவி மார்க்கண்டு மயூரி இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த யேசுதாசன் கிறிஸ்துராஜன் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி தர்மகுலசூரியர் நிலக்சனா உயிரியல் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை சென். திரோசா மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வான்மதி பெற்றுக் கொண்டுள்ளார். பொறியியல் தொழில்நுட்பத்தில் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த கண்ணப்பமூர்த்தி சுகந்தன் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். கணிதப் பிரிவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சிவராஜா வேணுயன் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள் உயிரியல் பிரிவில் முதல் மூன்று இடத்தையும் மாவட்ட ரீதியில் பெற்றுள்ளனர். மதனமோகன் சுலக்சனா, பிரதீஸ், கலையரசன் ஆகியோர் பெற்றுள்ளனர்.

(ஒ.5,159,213,105,110,104)

## ராஜித....

மருத்துவமனையிலிருந்து ராஜித தப்பிச் செல்லாத வகையில் அவர் சிகிச்சை பெறும் அறையைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனை வளாகத்திலும் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

**கைதுக்கான கட்டளையின் பின்னணி**

வெள்ளை வான் கடத்தல்கள் குறித்து, ஜனாதிபதி தேர்தல் பரப்புரைக் காலத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய விவகாரம் சம்பந்தமாக ராஜித சேனாரத்னவுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ராஜிதவை கைதுசெய்து வாக்குமூலம் பெறுவதற்கு குற்ற விசாரணைப் பிரிவினர் தயாரானவேளை, நீதிமன்றத்தை நாடிய ராஜித தம்மை கைது செய்வதிலிருந்து தடுப்பதற்கு முன்பிணை தாக்கல் செய்தார்.

முன்பிணை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம், அது குறித்த விசாரணையை 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. அத்துடன், ராஜிதவுக்கு வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், நீதிமன்ற பிடியாணை உத்தரவைப் பெற்று ராஜித சேனாரத்னவை கைது செய்யுமாறு குற்ற விசாரணைத் திணைக்களத்துக்கு சட்டமா அதிபர் டிசெம்பர் 24 ஆம் திகதி பணிப்புரை விடுத்தார். இதன்படி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தை நாடிய குற்ற விசாரணைப் பிரிவினர் ராஜித சேனாரத்னவை கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவை அன்று மாலையே பெற்று தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

கொழும்பிலும், பேருவளையிலும் உள்ள ராஜிதவின் வீடுகள் டிசெம்பர் 25ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டு, தேடுதல் நடத்தப்பட்டது. எனினும், அங்கு ராஜித இருக்கவில்லை.

மறுநாளும் அதாவது நேற்றுமுன்தினமும் இரண்டாவது நாளாக படை பட்டாளத்துடன் ராஜிதவின் வீட்டைச் சுற்றிவளைத்த, சி.ஐ.டியினர் அதிரடி தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர். எனினும், ராஜித சிக்கவில்லை.

**மருத்துவமனைக்குள் நுழைந்த சி.ஐ.டி!**

இந்நிலையில் கொழும்பு நாராஹேன்பிட்டிய பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையில் டிசெம்பர் 26 ஆம் திகதி இரவு 7 மணியளவில் ராஜித சேனாரத்ன, அவரின் உறவினர்களால் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். விடயம் அறிந்த குற்ற விசாரணைப் பிரிவினர், நாராஹேன்பிட்டிய பொலிஸார் சகிதம் மருத்துவமனைக்கு விரைந்தனர். ராஜிதவிடம் வாக்குமூலம் பெறவேண்டியுள்ளது என அறிவுறுத்தினர்.

எனினும், அவசர சிகிச்சை பிரிவில் ராஜித சிகிச்சை பெற்றுவருவதால், மருத்துவ ஆய்வு அறிக்கை வெளியான பின்னரே, விசாரணைக்கு ஒத்துழைப்பது குறித்து தீர்மானிக்க முடியும் என அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர், சி.ஐ.டியினரிடம் எடுத்துரைத்துள்ளார். விசாரணை அறிக்கை வெளிவரும் வரையில் சி.ஐ.டியினருக்கு மருத்துவமனையிலேயே காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

மருத்துவ அறிக்கை வெளிவந்த பின்னர், உயர் குருதி அழுத்தம் உட்பட மேலும் சில நோய்களால் ராஜித இருதய சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். இதனால், சி.ஐ.டியினருக்கு மீண்டும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**கைதும், விளக்கமறியல் உத்தரவும்**

இவ்வாறானதொரு பின்புலத்தில் நேற்று பிற்பகல் 2.10 மணியளவில் ராஜிதவை கைதுசெய்த குற்ற விசாரணைப் பிரிவினர், அது தொடர்பில் கொழும்பு மேலதிக நீதிவானுக்கு தெரியப்படுத்தினர். அவரை பிணையில் விடுவித்தால் விசாரணைக்கு பாதிப்பு ஏற்படலாம் என்பதால், விளக்கமறியல் உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து மருத்துவமனைக்குச் சென்று, சந்தேகநபரை பார்வையிட்ட பின்னர், அவரை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் சலனி உத்தரவிட்டார்.

அத்துடன், சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளின் கண்காணிப்பின்கீழ் தொடர்ந்தும் சிகிச்சை பெறுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசியல் வாதிகள் படையெடுப்பு!**

மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் ராஜிதவை பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் இரவும், நேற்றும் எதிரணி அரசியல் பிரமுகர்கள் மருத்துவமனையை நோக்கி படையெடுத்தனர். சம்பிக்க ரணவக்க, குமார வெல்கம ஆகியோரும் ராஜிதவை சந்தித்து சுகநலம் விசாரித்தனர். அதேவேளை, எந்நேரத்தில் வேண்டுமானாலும் ராஜித சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்படலாம்என்றும், வெலிக்கடைசிறைச்சாலையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஒ.5,22,44)

## ரஞ்சன்...

பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க 2 பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றதுடன் ஒரு பாடத்தில் சித்திய டைய வில்லை. இந்தத் தகவலை அவரே தனது முகநூலில் வெளியிட்டுள்ளார்.

அரசியல் விஞ்ஞானம், தொடர்பாடல் மற்றும் தொடர்பாடல் கல்வியில் எஸ் சாதாரண தரச் சித்தியடைந்ததுடன் கிருஸ்தவத்தில் சித்தியடையவில்லை. ஆங்கிலத்தில் ஏ சித்தியைப் பெற்றுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் ரஞ்சன் ராமநாயக்க தோற்றினார். அவர் சட்டத்தரணியாகும்கனவை நனவாக்கிக் கொள்ளும்நோக்கில் பரீட்சை எழுதினார். நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க, தனது 57ஆவது வயதில் உயர்தரத்தில் கல்வி கற்று 38 ஆண்டுகளின் பின் தனது எதிர்காலத்துக்காக பரீட்சை எழுதியிருந்தார். (ஒ.5)

## துப்பாக்கிச்...

மீட்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் தயாரிக்கப்படும், கட்டுத்துவக்கால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்று தமது முதல்கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் உயிலங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் சிறுநீலாசேனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இரண்டு பிள்ளைகளின் தந்தையான மாரி தர்மராசா (வயது-41) என்பவரே உயிரிழந்துள்ளார். மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றபதில் நீதிவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ விசாரணைகளை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு மேற்கொண்டார்.

உயிரிழந்தவர், குடும்பத்தினருடன் வசிக்கவில்லை. தனிமையிலேயே வாழ்ந்து வந்துள்ளார். அவர் தனிமையில் வாழ்ந்த வீட்டின் முன்பாகவுள்ள வீதியிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியாலேயே சுட்டுக் கொல்லப்பட்டமைக்கான அறிகுறிகள் தென்படுவதாகவும், இவரின் சடலத்துக்கு அருகில் சிறிய கத்தி இருந்ததாகவும், கட்டுத் துவக்குக்கு பாவிக்கும் வெடி பொருள்களின் சான்றுகளும் இருந்தமையால், இவர் துவக்குச் சூட்டுக்கு இலக்காகியே உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஒ.5,60)

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 834
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.12.27
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,734,825/-
வெற்றி இலக்கங்கள்
18 38 43 51 S

ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.12.2019
வெற்றி வாரம் 2720
வர்ணம் கடும் நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 39 51 56 57
சனிக் கிழமை வெற்றி பொதி ரூ. 2,490,330/=
28.12.2019 ம் திகதி சனிக் கிழமை இளம் நீல நிற டிக்கட்டுக்களாகும்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1098
சீட்டிழுப்பு திகதி 2019.12.26 வியாழக்கிழமை
X 10 18 30 76
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 87,994,676/-

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 309
சீட்டிழுப்பு திகதி 27.12.2019 சிகப்பு
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 15 45 69
விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 49,105,212/=
01.01.2020 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

# ஒரு லட்சம் உயிர்கள் 10 ஆண்டுகளில் காவு

## ஆப்கன் உள்நாட்டுப் போரால் அவலம்

**காபூல், டிசெ.28**

**ஆப்கானிஸ்தானில் நடந்த உள்நாட்டுப் போரில் இதுவரை ஒரு லட்சம் பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிட்டுள்ளது.**

2009ஆம் ஆண்டில் இருந்து நடக்கும் ஆப்கன் உள்நாட்டுப் போரில் சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். ஆப்கனில் வன்முறைகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளைத் தேட வலியுறுத்துகின்றோம்.

லட்சக்கணக்கான ஆப்கன் மக்கள் அரசியல் தீர்வு மூலம் தங்கள் நாட்டில் நடக்கும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரும் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஆப்கனில் தலிபான்களுடன் இணைக்கப்பாடு ஏற்படுத்தித் தீர்வு காண்பதில் நாடு, பிராந்திய, சர்வதேச அளவுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் போரில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பும் அமெரிக்கா, கடந்த சில ஆண்டுகளாக அமைதி முயற்சிகளில் ஈடுபாடு காட்டுகின்றது.

அமெரிக்கா தலைமையில் நடந்த பேச்சின் அடிப்படையில் ஏற்பட்ட உடன்படிக்கைகயை தலிபான் அமைப்பு ஏற்றுக் கொண்டிருந்தது. பேச்சு நடந்து கொண்டிருந்த போது ஆப்கனில் நடந்த தாக்குதல் ஒன்றில் அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்குத் தலிபான் அமைப்பு உரிமை கோரியிருந்த நிலையில், அமைதி முயற்சிகளில் இருந்து வெளியேறுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

அதன்பின்னர் 2016ஆம் ஆண்டு கடத்தப்பட்ட இரு பேராசிரியர்கள் ஆப்கனில் கைதிகள் இடமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்பட்டனர்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் முயற்சியால் இந்த விடுவிப்பு நடந்தது. அதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாகிஸ்தான் பிரதமர் மற்றும் ஆப்கன் ஜனாதிபதி ஆகியோருக்குத் தொலைபேசி ஊடாக நன்றி தெரிவித்துள்ளார். இந்தச் சூழ்நிலை ஆப்கன் அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# குடும்பத்தையே கொலை செய்தவருக்குத் தூக்கு!



டோக்கியோ, டிசெ.28

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரைக் கொலைச் செய்த சீன நாட்டவர் ஒருவர் ஜப்பானில் தூக்கிலிடப்பட்டார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவர் தூக்கிலிடப்பட்டார் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த நாட்டில் வெளிநாட்டவர் ஒருவர் தூக்கிலிடப்பட்டமை இதுவே முதல் முறையாகும்.

"மிகத் தீவிரமான பரிசீலனைக்குப் பின்னர் அவர் செய்த குற்றத்தின் கொடூரத் தன்மையைக் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்று ஜப்பான் நாட்டின் சட்டத்துறை அமைச்சர் மசாகோ மோரி தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் 2003ஆம் ஆண்டு நடந்துள்ளது. தூக்கிலிடப்பட்டவர் வெய் வெய் (வயது40). ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரைத் தனது சுயநலனுக்காகப் படுகொலை செய்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கொலை செய்யப்பட்டவர்களில் 8 மற்றும் 11 வயதுடையவர்களும் அடங்குகின்றனர்.

சீனாவில் இருந்து ஜப்பானுக்கு, ஜப்பான் மொழியைக் கற்பதற்காக வெய் வெய் வந்திருந்தார். அவர் தனது சக மாணவர்களுடன் இணைந்து தொழிலதிபர் ஷின்ஜிரோ மட்சுமோடோவின் இல்லத்தில் கொள்ளையிட்டதுடன், ஷின்ஜிரோ அவரது மனைவி மற்றும் இரு குழந்தைகளைக் கொன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச் செயலுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் இருவர் சீனாவுக்குத் தப்பியோடியிருந்தனர். ஆனால் அவர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு ஆயுள் தண்டனையும், மற்றையவருக்கு தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தூக்கு விதிக்கப்பட்டவருக்கு 2005ஆம் ஆண்டு தூக்கு நிறைவேற்றப்பட்டது. தற்போது வெய் வெய்க்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (எ)



# கட்டுப்பாடிழந்த விமானம் கட்டடத்தில் மோதி விபத்து

## 14 பேர் உயிரிழப்பு

அல்மோட்டி, டிசெ.28

கஜகஸ்தானின் அல்மோட்டி நகரில் இருந்து நேற்றுக் காலை 100 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் கட்டடத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கஜகஸ்தானின் அல்மோட்டி நகரில் இருந்து தலைநகர் நூர்சுல்தான் நகருக்கு நேற்றுக் காலை 7.22 மணிக்கு பெக் ஏர் நிறுவனத்துக்குச் சொந்தமான ஜெட் விமானம் புறப்பட்டது. விமானத்தில் 95 பயணிகளும், 5 விமான ஊழியர்களும் இருந்தனர்.

விமானம் அல்மோட்டி நகரில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்க்ளில் விமானியின் கட்டுப்பாட்டை இழந்து அல்மோட்டி நகரின் புறநகரில் இருக்கும் 2 அடுக்கு மாடிக் கட்டடத்தில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் விமானத்தின் பெரும்பகுதி நொறுங்கியது. விமானம் தீப்பிடிக்காததால் பெரும் இடர் தவிர்க்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமானம் விபத்துக்குள்ளான இடம் மக்கள் வசிக்கும் பகுதி என்பதால் அந்தப் பகுதியில் இருந்தவர்கள் உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட்டனர். இந்த விபத்தை அடுத்து அல்மோட்டி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட அனைத்து விமானங்களின் பறப்புகளும் இரத்துச் செய்யபபட்டன.

இந்த விபத்து நடந்தமைக்கான காரணம் தொடர்பாக ஆராய்வதற்கு கஜகஸ்தான் அரசு சிறப்புக் குழுவொன்றை அமைத்துள்ளது. (எ)

# இன்றைய நாள்

**மேடம்:** முக்கியமான பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ள லாம்.

**இடபம்:** மாறுபட்ட சூழலால் சிலரது அதிருப்தியை பெறுவீர்கள். கூடுதல் உழைப்பு தொழிலில் உற்பத்தி, விற்பனையை சராசரி அளவிற்கு கொண்டு வரும்.

**மிதுனம்:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். தாமதமான பணிகள் முன்னேற்ற இலக்கை அடையும். தொழிலில் உற்பத்தி, விற்பனை கூடும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கடகம்:** நற்செயலுக்கான நன்மை தேடி வரும். புதியவர்கள் அன்பு பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பண பரிவர்த்தனை முன்னேற்றம் தரும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் ஏற்படும்.

**சிம்மம்:** முக்கியமான பணியை அடுத்தவரிடம் ஒப்படைக்க கூடாது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். புதிய இனங்களில் பண செலவு ஏற்படலாம்.

**கன்னி:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை உருவாகி தொந்தரவு தரும். பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** திட்டமிட்ட செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க தகுந்த மாற்றம் செய்வீர்கள். கூடுதல் லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் நிலுவை பணி நிறைவேற்றுவது அவசியமாகும். அளவான பண வரவு கிடைக்கும்.

**தனுசு:** எதிர் கால வாழ்வில் புதிய நம்பிக்கை ஏற்படும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதில் பூர்த்தியாகும். நிலுவை பணம் வசூலாகும்.

**மகரம்:** தகுதி திறமை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்றவும்.

**கும்பம்:** உங்களின் பணி திறனை வளர்த்து கொள்வீர்கள். தொழிலில் அபிவிருத்திக்கான பண வசதி கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** தியாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். சத்தான உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும்.




"2022 சந்திப்பு" என்னும் பனிப் பண்பாட்டு விழா பெய்ஜிங் ஒலிம்பிக் மையத்தில் நேற்றுமுன்தினம் 26ஆம் திகதி ஆரம்பமாகியது. 2022ஆம் ஆண்டு பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு ஆயத்த நிகழ்ச்சியாக இந்தப் பனிப் பண்பாட்டு விழா நடத்தப்படுகின்றது. அறிவியல் தொழில்நுட்பக் கண்காட்சி, பனி அனுபவம் என்பன போன்ற நிகழ்வுகள் இதில் நடைபெறவுள்ளன.

# ரஷ்யா, ஈரானில் மிதமான அதிர்வு

மொஸ்கோ, டிசெ.28

ரஷ்யா மற்றும் ஈரானில் நேற்று மிதமான நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் பலான நகரத்தின் தென் மேற்கில் 74 கிலோமீற்றர் தொலைவிலும், 14 கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 5.4 ரிச்டர் ஆகப் பதிவாகியது என்று அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஈரானிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

புஷெர் அணு மின் நிலையம் அமைந்துள்ள பகுதியில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் 5.1 ரிச்டர் ஆகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கங்களால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக உடனடியாக அறிய முடியவில்லை. (எ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 01 . 1948



இறப்பு
25 . 12 . 2019

### திருமதி கௌரி கருணாநிதி

(பலாலி பிறந்த இடம், சுன்னாகம், கொழும்பு 13)

யாழ். பலாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், கொழும்பு - 13 ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கௌரி கருணாநிதி 25.12.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், ஏழாலை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி தம்பதி களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கருணாநிதி (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், விமலன் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), உமா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விசாக இந்திரை (ஐக்கிய அமெரிக்கா), காலஞ்சென்ற வாமதேவன், ரவீந்திரன் (லண்டன்), பாலகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யாமினி (லண்டன்), பிருந்தா (லண்டன்), சதீஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனலட்சுமி (இலங்கை), நித்தியலட்சுமி (இலங்கை), பகவதி (கனடா), காலஞ்சென்ற கருணானந்தம், கருணாகரன் (இலங்கை), பவானி (இலங்கை), மகாதேவன்(ஜேர்மனி), பாக்கியலட்சுமி (இலங்கை), நந்தினி (கனடா), சுகந்தினி (நோர்வே) காலஞ்சென்ற சுந்தரலிங்கம், ரஜனி (லண்டன்), மலைமகள் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், விஷ்ணுஜன்(லண்டன்), யஸ்வினி (லண்டன்), ஆரோன் (லண்டன்), ஆசினி (லண்டன்), மகிசா (சுவிஸ்), மிதுசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை ஏழாலை கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் ஏழாலை காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/30209)(11,17)

தகவல்:- குடும்பத்தினர்.

விமல் (மகன்) -+447946783378, சுதா (மகள்) - +4475 907 50585,
உமா (மகள்) - +94 783 525385, கண்ணன் (தம்பி) -+44 788 2676 348

திருமணப்பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
நத்தார், புதுவருட
ஆடைத் திருவிழா

02 சாறிகள்
வாங்கினால் அதே சாறி
01 இலவசம்



கொட்டன் சல்வார்
பழைய விலை - 3500
புதிய விலை - 1000

- ✓ பட்டுச் சாறிகள்
- ✓ கொட்டன் சாறிகள்
- ✓ சல்வார்
- ✓ சல்வார் துணிகள்
- ✓ Top வகைகள்
- ✓ சேட், T சேட் ரவுசர்

இன்னும் ஏராளமான
ஆடைத் தெரிவுகள்

காலம் : 31.12.2019 வரை.
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## மரண அறிவித்தல்

மலர்வு
29 . 12 . 1949



உதிர்வு
26 . 12 . 2019

### திருமதி செல்வராணி சிற்றம்பலம்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சிற்றம்பலம் கடந்த வியாழக்கிழமை (26.12.2019) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் பரமேஸ்வரி தம்பதிகளின் மகளும் சிற்றம்பலம் (இளைப்பாறிய கிளை முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயூரகன் மற்றும் உதயகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்சினி, கிரிஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாலினி, கவிநாத், கபினேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று வழுக்கையாறு இந்துமயானத்தில் முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 30010)(4.17)

021 225 1599

## குத்துச்சண்டை வீரருக்கு ஓராண்டு தடை

இந்தியாவின் குத்துச் சண்டை வீரர் சுமித் சாங்வான் ஊக்கமருந்து பரிசோதனையில் தடை செய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தியதால் அவருக்கு ஓராண்டு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆசிய விளையாட்டில் வெள்ளிப் பதக்கம் வென்றவரான இந்திய முன்னணி குத்துச் சண்டை வீரர் சுமித் சாங்வானிடம் கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்த ஊக்க மருந்து பரிசோதனையில் தடை செய்யப்பட்ட மருந்தை அவர் பயன்படுத்தியது தெரிய வந்தது. இதனால் அவருக்கு ஓராண்டு தடைவிதித்து தேசிய ஊக்கமருந்து தடுப்பு பிரிவு.




# யுனைற்றட் - கொங்கீயூரஸ் இறுதியில் பலப்பரீட்சை

கரணவாய், டிசெ.28


கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கொலின்ஸ் பிறிமியர் லீக் கால் பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் வர்ண இரவுகள் விருது வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பழைய கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் கொலின்ஸ் யுனைற்றட் அணியை எதிர்த்து கொலின்ஸ் கொங்கீ யூரஸ் அணி மோதவுள்ளது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர். ஜெ.ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.சுரேஸ்குமாரும், சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர்களான சி.பாரதிராஜ், மு.அபிராம் மற்றும் விளையாட்டு அலுவலர் வ.ஹரிகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (108-23)




# முதல் இன்னிங்ஸில் ஆஸி. வலுவான நிலை



சிமித் ஏமாற்றினாலும், டிராவிஸ் ஹெட் சதம் போட ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 467 ஓட்டங்களைக் குவித்தது.

நியூசிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் இரு அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நேற்று ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் ஆஸ்திரேலியா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஆஸ்திரேலியா அணி முதல் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. சிமித் 77 ஓட்டங்களுடனும், டிராவிஸ் ஹெட் 25 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் இணைந்து நேற்றைய நாளிலும் நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்த முற்பட்டனர். எனினும் சிமித் 85 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அடுத்து டிராவிஸ் ஹெட் உடன் அணித் தலைவர் டிம் பெய்ன் இணைந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். டிராவிஸ் ஹெட் சிறப்பாக ஆடி சதம் கடந்தார். மறுமுனையில் டிம் பெய்ன் அரைச்சதம் அடித்தார். டிராவிஸ் ஹெட் சிறப்பாக ஆடி 114 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் பெய்னும் 78 ஓட்டங்கள் பெற்ற போது எதிர்பாராத விதமாக எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்ப அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 467 ஓட்டங்களைப் பெற்றது.

நீல் வோக்னர் 4 இலக்குகளையும், டிம் சவுத்தி 3 இலக்குகளையும், கிராண்ட் ஹோம் 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.


பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக லாதம், பிளன்டல் களமிறங்கினர். அணி நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. லாதம் 9 ஓட்டங்களுடனும், ரெயிலர் 2 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

## பூப்பந்தாட்ட லீக் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்.டிசெ.28


யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக நடைபெறவுள்ள வடக்கின் 5மாவட்டங்களுக்கு இடையிலான 6 அணிகள் மோதும் "லேடன் பூப்பந்தாட்ட லீக்" தொடர் இன்று காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி தொடரில், யாழ்.மாவட்டம், மன்னார் மாவட்டம், வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் கிளிநொச்சி மாவட்டம், பேசாலை பிரதேசம் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. இந்தத் தொடரின் அரையிறுதி, இறுதி மற்றும் மூன்றாம் இடத்துக்கான போட்டிகள் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன. (23)



## இங்கிலாந்து - தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடர்

# ஒரேநாளில் சரிக்கப்பட்ட 14 இலக்குகள்






பிலண்டர், ரபாடா பந்து வீச்சில் இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 181 ஓட்டங்களுக்குள் சுருண்டது. தென்னாபிரிக்கா அணி 6 இலக்குகள் கைவசமிருக்க நேற்றைய நாள் முடிவில் 175 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்படுகின்றது

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், ஒரு ரி-20 போட்டிகளில் விளையாடுகின்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் செஞ்சூரியனில் ஆரம்பமாகியது.

பூவா, தலையா பார்த்ததில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்கா அணி முதல் நாள் முடிவில் 277 ஓட்டங்களுக்குள் 9 இலக்குகளை இழந்திருந்தது. நேற்றைய நாளுக்காகக் களமிறங்கிய அணி சகல இலக்குகளையும் இழந்து 284 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் சாம் கரன், புரோட் தலா 4 இலக்குகளை அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பேர்ன், சிப்லி களமிறங்கினர். அணி 11 ஓட்டங்களைப் பெற்ற போது முதலாவது இலக்கை பிளண்டர் கைப்பற்றி இலக்குச் சரிப்பை ஆரம்பித்து வைத்தார். பேர்ன்ஸ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இணைந்தார் டென்லி. அவர் வந்ததும் சிப்லி 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ரூட், டென்லி இணை அணிக்கு நம்பிக்கையளித்து ஓட்டங்களைச் சேர்த்தனர். இருந்து டென்லி 50 ஓட்டங்கள் பெற்றதும் ஆட்டமிழந்து வெளியேற அணி பரிதாபகரமானது. ஸ்ரோக்ஸ், பட்லர், பெயர்ஸ்டோ என மத்தியதர வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் இருந்தும் அவர்களால் களத்தில் நிலைத்து நின்று ஆட முடியாமல் போனது. தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சு அசுர பலமாகக் காணப்பட்டது எனலாம்.



அணி தனது முதல் இன்னிங்ஸில் 181 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்துசுருண்டது.

பந்து வீச்சில் பிலண்டர் 4 இலக்குகளையும், ரபாடா 3 இலக்குகளையும், நிரோஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.


103 ஓட்டங்கள் முன்னிலையில் தென்னாபிரிக்கா அணி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கியது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மர்க்கரம், எல்கர் களமிறங்கினர். அணி 2 ஓட்டங்களைப் பெற்ற போது தென்னாபிரிக்கா அணியின் முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. மர்க்கரம் 2 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ஆரம்ப இலக்குகள் நான்கும் சொற்ப ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டது. அணி நேற்றைய நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. வான் டுசன் 17 ஓட்டங்களுடனும், நிரோஜ் 4 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் ஆர்ச்சர் 2 இலக்குகளையும், அன்டர்சன், புரோட் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

---

# நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஆஸி.வீரர் ஸ்டீவ் சிமித்





நியூசிலாந்துக்கு எதிராக மெல்பேர்னில் ஆரம்பமாகியுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நடுவரின் தீர்ப்புக்கு எதிராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித் வாக்குவாதத்தில் ஈடுபட்டமை சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

முதல் டெஸ்டின் 26வது பந்துப்பரிமாற்றத்தில் வாக்னரின் சோர்ட் பிச் பந்தினை விளையாட முயலாத சிமித் ஆனால் லெக்பையினை பெறுவதற்காக ஓட முயன்றார். எனினும் அந்த பந்தை டெட்போல் என அறிவித்த நடுவர் நைஜல் லோங் சிமித்தை அங்கேயே நிற்குமாறு கேட்டுக்கொண்டார்.

எனினும் மதியநேர இடைவேளைக்காக அணியினர் ஓய்வறைகளுக்கு திரும்பிக் கொண்டிந்த வேளை சிமித் நடுவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இவரின் இந்த நடவடிக்கை சமூக ஊடகங்களில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை. ஷேன் வோர்ன் சிமித்துக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளார். இது குறித்து சேன்வோர்ன் தெரிவிக்கையில்;

பந்திலிருந்து தப்புவதற்கே சிமித் முயன்றார், நடுவரின்முடிவு பிழையானது. நடுவர்களுக்கு கிரிக்கெட் விதிமுறைகள் அடங்கிய நூலை அனுப்பவேண்டியுள்ளது. நடுவர் அந்தப் பந்தை அர்த்தப்படுத்திய விதம் பிழையானது என்பதால் சிமித் கோபமடைவதற்கான காரணங்கள் உள்ளன.

பவுன்சர் பந்திலிருந்து நீங்கள் தப்ப முயன்றால் அது உங்கள் உடலின் எந்த பாகத்தில் பட்டாலும் நீங்கள் ஓட்டமெடுக்க ஓடலாம் என்பதே விதிமுறை - என்றார்.

# ஸ்டுவர்ட் புரோட் புதிய சாதனை

இந்த 10 ஆண்டுகளில் டெஸ்ட் போட்டிகளில் 400 இலக்குகள் வீழ்த்திய 2ஆவது வீரர் என்ற சாதனையை படைத்தார் ஸ்டுவர்ட் புரோட்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் இடம்பெற்று வரும் டெஸ்ட் போட்டியில் 3 இலக்குகளைக் கைப்பற்றியதன் மூலம் இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் புரோட் புதிய சாதனையைப் படைத்தார். அவர் கடந்த 10 ஆண்டுகளில் 400 டெஸ்ட் போட்டிகளில் 400 இல்க்கை எடுத்த 2ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த மற்றொரு வேகப் பந்து வீச்சாளரான அண்டர்சன் 428 இலக்குகளை எடுத்து முதலிடத்திலும். ஆஸ்திரேலியா பந்து வீச்சாளர் நாதன் லயன் 376 இலக்குகளுடன் 3ஆவது இடத்திலும், இலங்கை வீரர் ஹேரத் 363 இலக்குகளுடன் 4ஆவது இடத்திலும். இந்திய வீரர் அஸ்வின் 362 இலக்குகளுடன் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

## தேவை

**நீர்வேலி கரந்தன் பகுதியில் உள்ள விவசாயப் பண்ணைக்கு** அனுபவமிக்க **தோட்ட பராமரிப்பாளர்** தேவை. குடும்பமாக தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
**RVG Company**
**58, Nallur Cross Road, Jaffna.**

## 2020 A/L paper Classes/Day Classes


இந்து நாகரிகம் - I, II
Hindu Civilization - I, II
- Pass Papers - (2009 - 2019)
- Model Papers - (NIE, FWC, Provincials and others
- Units Papers - (NEC)

ஆசிரியர் - க.கனைக்ஸ்

NEC கிளிநொச்சி
(கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக)

ஆரம்பம்
31.12.2019
at8.00 am
வகுப்புக்கள்
திங்கள் - வெள்ளி
2.30 pm

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10 - 09 - 1946

மறைவு
08 - 01 - 2019

### பொன்னையா கணேஷ் (பாலா)

(திதி - துதியை 28.12.2019)

அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழ வைத்த அப்பாவே !
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மைவிட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில்
என்றும் வாழ்வீர்கள் அப்பாவே !

கலட்டி சங்குவேலி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

021 225 5124 / 077 374 9207

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

### 2022 A/L தொழில்நுட்பபிரிவு

| | |
|---|---|
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - சக்தி, ராகவன், முருகநிரோஜன், லவன் |
| பொறியியல் தொழில்நுட்பம் | - அருண்குமார், சிவஜன், டினோசன், கேதீஸ், திவாகர் |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் | - திருக்குமரன், ஜெயந்தன், சிவகுமார், நிரோஜன், ராகவன் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - லவன், உமாகாந்தன் |
| புவியியல் | - S.P.கரன் |
| விவசாய விஞ்ஞானம் | - நிரோஜன், ஜெயந்தன், சாரங்கன் |
| ஊடக கல்வி | - K.V.நவநீதன் |
| கணிதம் | - தயாளன் |
| சித்திரம் | - ஜெயந்தன் |

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ். 0770175346, 0771703549

புதிய பிரிவு ஆரம்பம் 04.01.2020 சனிக்கிழமை காலை 09.00 மணி

## விஸ்டம்

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

04.01.2020 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு

புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L 2022 | Day 2020

பொறியியல் தொழினுட்பவியல்
உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி

077 248 7774 / 021 221 7860

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் யோகேஸ்வரன்



அச்சுக்கூட வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வில்லுமதவடி நீர்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் யோகேஸ்வரன் நேற்று (27.12.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - பரிபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், செல்வரஞ்சியின் அன்புக் கணவரும், சோபிதன், டிலக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான விமலநாயகி, அருமைநாயகி, ஸ்ரீலோகநாயகி மற்றும் ஸ்ரீலோகநாதன், கெங்கநாயகி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வசந்தகுலமணி மற்றும் குணசேகரம் ஆகியோரின் மைத்துனரும், விதுசன், கல்பனா ஆகியோரின் மாமனும், வித்தகனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வில்லுமதவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி ஒழுங்கை,
வில்லுமதவடி, நீர்வேலி தெற்கு. (CS/30203)(11,17)

தகவல்:-
குடும்பத்தினர்.

## SALE ! SALE ! SALE !

### ஏசியன் தளபாட நிலையத்தில்

மாபெரும் வருட இறுதி மலிவு விற்பனை

| | | | |
|---|---|---|---|
| கண்ணாடி அலுமாரி | 6 x 3 | ~~13900/=~~ | 11,150 /= |
| மர அலுமாரி | 6 x 3 | ~~27000/=~~ | 18,900 /= |
| மெத்தை (Double Layer) | 6 x 3 | ~~3750/=~~ | 3,100 /= |
| மெத்தை (Double Layer) | 6 x 4 | ~~4890/=~~ | 4,000 /= |
| பிரம்பு செற் + 1 ரீப்போ | | ~~17000/=~~ | 15,350 /= |
| Sofa Set (3 +1 +1 ) | | ~~39000/=~~ | 33,000 /= |
| Stand Fan - Innovex | | ~~4500/ =~~ | 3740 /= |
| TV - 32" Panasonic + Free panasonicDVD Player | | ~~32000/=~~ | 28000/= |

மேலும் பல பொருள்கள் மலிவு விற்பனை

076 821 9416, 076 821 9418
Facebook - Asian Furniture Jaffna.
இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்

## சிறுநீரகம் தேவை

40 வயதுடைய நபர் ஒருவருக்கு $A^+$ அல்லது $O^+$ குருதி வகையைக் கொண்ட சிறுநீரகம் தேவை.

077 779 4579, 076 215 9902

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான
தொலைத்தொடர்பு நிலையத்தில்
பணிபுரிவதற்கு **தமிழ்** மற்றும் **ஆங்கில தட்டச்சு** தெரிந்த **பெண்பிள்ளைகள்** வேலைக்குத்தேவை.

தொடர்பு: 077 538 0981

## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கி வரும் உணவகத்திற்கு உணவு பரிமாறுபவர், தேநீர் தயாரிப்பாளர், உணவு பொதிசெய்யக்கூடிய அனுபவமுள்ள ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:- 076 878 3734



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.